
www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

மார்ச் 2008
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00



பள்ளி மாணவர் வன்முறை:

## நுகர்வு வெறியில் பிறக்கும் கொலை வெறி!

படிப்பகம்

www.padippakam.com

# தரகு முதலாளிகளின் பிடியில் தமிழ் சினிமா!



தமிழ் மக்களுக்கு சினிமா இழைத்திருக்கும் அநீதிகள் பல. அரசியல் துவங்கி ஆனந்த விகடன் வரையிலும், அதன் அநீதியான செல்வாக்கு அதிகம். தேர்தல் காலங்களில் கூட்டம் சேர்ப்பதற்கும், விஜயகாந்த், சரத்குமார் போன்ற பிழைப்புவாத ஹீரோக்கள் கட்சி ஆரம்பிப்பதற்கும், புரட்சித் தலைவி - தலைவர் போன்ற பாசிஸ்ட்டுகள் உருவானதற்கும், குடியரசு நாளில் கூட குத்தாட்ட நடிகை ஜனநாயகம் பற்றி போதிப்பதற்கும், மக்களின் எல்லா நேரத்தையும் கைப்பற்றியதற்கும், மொத்தத்தில் தமிழ் வாழ்க்கையின் தரத்தை வெகுவாக தாழ்த்தியிருக்கும் சினிமா, ஒரு கரையான் புற்று. இதற்கு பாலூற்றி வழிபடும் தமிழ் மனத்தை திருத்துவதற்கு, நாம் சிரமப்பட வேண்டியிருக்கிறது. தமிழ் சினிமாவை ஆக்கிரமிக்கப் போகும் தரகு முதலாளிகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் வருகை, அந்தச் சிரமங்களை அதிகப்படுத்தியிருக்கிறது.

1990-களின் இறுதியில் தொலைக்காட்சிகள் சூடு பிடித்த நேரத்தில், நாளுக்கொரு சினிமா வெளியிட்டுக் கொண்டிருந்த தமிழ் திரையுலகம் தள்ளாட ஆரம்பித்தது. எந்தப் படம் வெற்றிபெறும் என்று கணிக்க முடியவில்லை. தோல்விகளின் அணிவகுப்பு, பன்றி போடும் குட்டிகளைக் குறைத்தது. அதனால் சிங்கக் குட்டியொன்றும் பிறந்து விடவில்லை. 'தயாரிப்புச் செலவைக் குறைக்க வேண்டும், நட்சத்திரங்களின் ஊதியம் குறைக்கப்பட வேண்டும்' என்று பத்திரிகைகள் துவங்கி படைப்பாளிகள் வரை பல சீர்திருத்தங்களைப் பேசினர். உண்மையில் இவற்றின் எதிர்மறைகள்தான் வளர்ந்தன.

படத்தயாரிப்புச் செலவு அதிகரித்ததோடு, நட்சத்திரங்களின் எண்ணிக்கையும் வளர்ந்தன. ஏனெனில், தமிழ் திரையுலகை யாரும் சீர்திருத்தம் செய்ய முடியாது. அது பங்குச்சந்தையின் சூதாட்ட விதிகளைக் கொண்டுதான் வளர்ந்திருக்கிறது. ஒரு படம் வெற்றியடைந்த பின், அதன் நாயகனது சம்பளத்தை எக்குத் தப்பாக உயர்த்தி நட்சத்திர நடிகராக்குவது தயாரிப்பாளர்கள்தான். அற்பத்தனத்தை பிரம்மாண்டமாக காட்ட வேண்டும் என்று, கோடிகளில் செலவு செய்யும் தயாரிப்பாளரது படத்தை அதிக விலை கொடுத்து வாங்குவது விநியோகஸ்தர்கள்தான். அதை அதிக கட்டணத்தில் வாங்கி பணத்தைக் குவிக்க முடியும் என்று நினைப்பவர்கள்தான் திரையரங்க முதலாளிகள். இப்படி ஒவ்வொரு பேராசையும் தனக்குத்தானே குழி பறித்துக் கொள்கிறது.

வேறெந்தத் தொழிலையும் விட இங்கு பல மடங்கு இலாபம் ஈட்ட முடியும். ஆனால் அந்த இலாபம் ஒரு பிரிவினருக்கு மட்டும்தான் போக வேண்டும் என்பதல்ல. தயாரிப்பாளர்கள், நட்சத்திரங்கள், விநியோகஸ்தர்கள், திரையரங்க முதலாளிகள் அனைவரும் இந்த இலாபத்தை சரிசமமாகப் பங்கிட்டுக் கொள்வதில்லை. ஒவ்வொரு காலகட்டத்திலும், ஒவ்வொரு பிரிவினர்தான் இந்த வருமானத்தை அள்ளினார்கள். அள்ள முடியாதவர்கள் புலம்பினார்கள். என்றாலும் இந்தச் சூதாட்டம் அழிந்து விடவில்லை. உலகமயமாக்கமும், தொழில்நுட்ப வளர்ச்சியும் புதிய வாய்ப்புகளை வழங்கின. சர்வதேச உரிமையும், தொலைக்காட்சி உரிமையும், தமிழ்ப் படத்தை தென்னிந்திய மொழிகளில் மாற்றம் செய்து வெளியிடும் உரிமையும், இலாபத்தின் புதிய வாசல்களைத் திறந்தன.

இதனால் முன்னைவிட தயாரிப்புச் செலவுகள் பல மடங்கானது. நட்சத்திரங்களை மையமாக வைத்தே தொலைக்காட்சிகளின் எல்லா நிகழ்ச்சிகளும் மக்களிடையே கொண்டு செல்லப்படுவதால், நட்சத்திரங்களின் தேவை அதிகரித்தன. முன்னைவிட சூதாட்டம் விறுவிறுப்பாக நடைபெற்றது. இருப்பினும் இதுநாள் வரை இந்தச் சூதாட்டத்தைக் கட்டுப்படுத்தியவர்கள், மிகப்பெரும் நட்சத்திரங்களும், சில குடும்பங்களின் தயாரிப்பு நிறுவனங்களும்தான்.

இச்சூழலில்தான் தமிழ்த் திரையுலகை கடைத்தேற்ற பன்னாட்டு நிறுவனங்களும், தரகு முதலாளிகளும் களத்தில் குதித்திருக்கின்றனர். மும்பை பங்குச் சந்தையை அன்னிய நிதி நிறுவனங்கள் ஆட்டுவிப்பது போல, இவர்கள் தமிழ் திரையுலகை ஆட்டுவிக்கலாம். 'சில கோடிகளை செலவழித்து விட்டு' பல கோடிகளை இலாபமாக பார்க்கலாம், என்பது இந்நிறுவனங்களை ஈர்த்திருக்கலாம். மேலும் நுகர்வுச் சந்தையின் பிரச்சாரகனாக திரையுலகை பயன்படுத்தலாம் என்பது கூட காரணமாக இருக்கலாம். சினிமாவில் கொட்டப்படும் காசு பல விதங்களில் பயன்படும் என்பதால்தான் இந்தப் படையெடுப்பு.

குறுந்தகடுகள் தயாரிப்புக்குப் பெயர்பெற்ற 'மோசர் பேயர் நிறுவனம்' பத்து மொழிகளில் பத்தாயிரம் இந்திய சினிமாக்களின் வீடியோ உரிமையைப் பெற்றுள்ளது. தற்போது சினிமா தயாரிப்பிலும் இறங்கியுள்ளது. தமிழ் திரையுலகில் மட்டும் 25 கோடிக்கும் மேல் முதலீடு செய்திருக்கிறது. சிங்கப்பூரிலிருந்து வந்திருக்கும் பிரமிட் சாய்மீரா நிறுவனம் தற்போது 13 தமிழ் படங்களைத் தயாரித்து வருகிறது. மாதம் இரு படங்களை விநியோகிப்பது, மாதம் ஒரு படம் தயாரிப்பது, என்ற இலக்குடன் இறங்கியிருக்கும் இந்த

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

**$ சினிமாவை முற்றிலுமாக கட்டுப்படுத்தப் போகும் ஏகபோகமாக இந்நிறுவனங்கள் மாறப்போகின்றன. அதாவது வெறும் திரைப்படத் தயாரிப்பு என்பதோடு அவை நிற்கப் போவதில்லை. நடிகர்கள், இயக்குநர்கள், தயாரிப்பு, விநியோகம், திரையிடல் அத்தனையும் இவர்களது கட்டுப்பாட்டில்தான் வரும். $**



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே!

- புதிய கலாச்சாரம்
- மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

- போர்: **25**
- குரல்: **9,10**
- பிப்ரவரி, மார்ச் 2008

உள்நாடு: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா US$ 9

*சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்*

இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்),
அசோக் நகர்,
சென்னை - 600 083.

தொலைபேசி: 044-23718706.

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@rediffmail.com

அலுவலக நேரம்:
காலை 10 முதல் மாலை 5 மணி வரை.

*அட்டை வடிவமைப்பு:*
ஸ்பார்ட்டகஸ்

# தில்லைச் சிற்றம்பலத்தில் தமிழ்:

# வீழ்ந்தது பார்ப்பன ஆதிக்கம்! ஒழிந்தது ஆயிரமாண்டுத் தீண்டாமை!!

**மா**ர்ச் 2-ஆம் நாளன்று காலை தில்லைச் சிற்றம்பல மேடையில் தமிழ் ஒலித்தது. கண்கள் மங்கி, கால்கள் தள்ளாடி, நடக்கும் ஆற்றலைக் கூட இழந்து விட்ட முதியவரான சிவனடியார் ஆறுமுகசாமி, சிற்றம்பல மேடையில் நின்று தேவாரம் பாடினார். ''தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்று பார்ப்பன அடிமைத் தொழில் செய்வதற்கு அந்த சிவபெருமானே அடியெடுத்துக் கொடுத்ததாகக் கூறப்படும் சிற்றம்பல மேடையில் நின்றபடி தேவாரத்தின் எந்த வரிகளை அறுமுகசாமி பாடினார் என்று யாருக்கும் கேட்கவில்லை. கலவரத்துக்கும் தீட்சிதப் பார்ப்பனர்களின் ஊளைச்சத்தத்துக்கும் இடையில் அவர் அருகிலேயே நின்றிருந்த எமது தோழர்கள் கூட ஆறுமுகசாமியின் உதடு அசைந்ததை மட்டும்தான் பார்க்க முடிந்தது.

ஆனால் அவர் பாடினார். தில்லையிலிருந்து சில நூறு கல் தொலைவில் இருந்த எமக்கு மட்டும் ஆறுமுகசாமியின் குரல் தெளிவாகக் கேட்டது. ''தில்லை வாழ் அந்தணர்க்கு நான் அடியார் இல்லை... இல்லை... இல்லவே இல்லை'' என்று சிற்றம்பல மேடையில் நின்றபடி அந்த தில்லை நடராசனுக்கு அறிவித்திருக்கிறார் ஆறுமுகசாமி. அவர் உதடுகளிலிருந்து வெளிப்பட்ட சொற்கள் எவையாக இருந்த போதிலும் அவை உணர்த்தும் பொருளும் உணர்வும் இதுதான். இது மட்டும்தான்.

அவர் மனம் உருகிப் பாடவில்லை, பாடியிருக்கவும் முடியாது என்பதை தொலைக்காட்சியில் அந்த நிகழ்வைப் பார்த்த அறிவிலிகளும் கூடப் புரிந்து கொண்டிருக்க முடியும். அவர் மனம் குமுறிக் குரல் கொடுத்தார் என்பதுதான் உண்மை. அங்கே நடந்தது 'வழிபாடு' அல்ல, போராட்டம்!

'சைவ மெய்யன்பர்கள் மனமுருகித் தமிழில் பாடி இறைவனை வழிபடுவதற்கான உரிமையை வழங்குவதாக' கூறும் அந்த அரசாணையின்படி சிவனடியார் ஆறுமுகசாமி தில்லை நடராசனை 'வழிபடவில்லை'. வழிபட முடியவும் இல்லை. அங்கே நடந்தது போராட்டம். போராட்டம் மட்டும்தான். அங்கே ஒலித்தது தமிழே அன்றித் தேவாரம் அல்ல. அங்கே நின்ற ஆறுமுகசாமி போராளியே அன்றி பக்தர் அல்ல.

நேர்ப்பொருளிலும் இதுதான் உண்மை. ஆறுமுகசாமி வாய்திறந்தவுடனே கருவறையை இழுத்து மூடிவிட்டு நந்தியாய் நடராசனை மறைத்து நின்று கொண்டார்கள் தீட்சிதர்கள். அன்று நடராசனைக் காணவிடாமல் நந்தனை மறைத்தது கூட உயிரற்ற கல்லான நந்தியல்ல, உயிருள்ள தீட்சிதப் பார்ப்பனர்கள் தான் என்ற உண்மையை, பல நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த அந்தக் காட்சியை, நம் கண் முன்னே கொண்டுவந்ததன் மூலம், வரலாற்றை இன்னொரு முறை நம் கண் முன்னே நிகழ்த்திக் காட்டினார்கள் தீட்சிதர்கள்.

●●●

**ஆ**ம்! இது ஒரு வரலாற்றுச் சாதனை. நந்தனையும், பெற்றான் சாம்பானையும் பலி கொண்ட தீட்சிதர்கள், வள்ளலாரையும் முத்துத்தாண்டவரையும் ஜோதியில் கலக்க வைத்த தீட்சிதர்கள், தேவாரத்தை முடக்கி வைத்து, மன்னன் இராசராசனுக்கே சவால் விட்ட தீட்சிதர்கள், அந்தத் தில்லைக் கூத்தனே மூவாயிரமாவது தீட்சிதன்தான்'' என்று இறுமாப்போடு பிரகடனம் செய்து அதை இன்று வரை நிலைநாட்டி வரும் தீட்சிதர்கள், எந்த வித பட்டாவோ பாத்தியதையோ இல்லாமல் பல்லாயிரம் கோடி மதிப்புள்ள ஆலயத்தின் சொத்துக்களுக்கு பாத்தியதை கொண்டாடி வரும் தீட்சிதர்கள், சிற்றம்பல மேடையை சீட்டுக்கட்டு மேடையாகவும், ஆயிரங்கால்

தொடர்ச்சி 14-ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

## ஆணாதிக்கத்தின்

# அமிலக் காதல்!

மார்ச் 8 பெண்கள் தினம். சமூக அமைப்பினாலும், குடும்ப நிறுவனத்தாலும் அடிமைப்படுத்தப்பட்ட பெண்கள், தமது விடுதலைக்கான புரிதலையும், புத்தார்வத்தையும் புதுப்பிக்க வேண்டிய நாள். உழைக்கும் வர்க்கம் மற்றும் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த பெண்கள், வீட்டுச் சிறையிலிருந்து விடுபட்டு, பெருந்திரளாக வேலைக்குச் சென்று கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் கூட, அவர்களது சமூக நிலையில் பெருமளவு மாற்றம் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை. உலக மயத்தின் நுகர்வுக் கலாச்சாரத்தால் அழகுப் பதுமைகளாக ஆக்கப் பட்டுள்ள பெண்கள், வீட்டிலோ சாதிய, மத, ஆணாதிக்க, நிலவுடைமை போன்ற பிற்போக்குகளின் கீழ் அடைபட்டுள்ளனர்.

இருப்பினும் சற்றே சுய பொருளாதாரத்துடனும், வெளியில் சிறிது சுதந்திரத்துடனும் நடமாடும் பெண்களுக்கு, ஆசுவாசப்படுத்தும் விசயமாக இருக்கிறது காதல். இக்காதல் பொதுவாக மேலோட்டமாகவே இருந்தாலும், அதற்கு ஆட்படும் பெண்களுக்கு குறுகிய காலத்திற்காகவாவது சுய மதிப்பையும், மகிழ்ச்சியையும் தரத்தான் செய்கிறது. வெற்றி பெறுகின்ற காதல், திருமணத்திற்குப் பிறகு தனது முற்போக்கு முகமூடியை இழந்து விடுவதால், தனது பழைய நிலையை பெரும்பாலும் அடைந்து விடுகிறாள், பெண்.

மின்னலைப் போலத் தோன்றி மறையும் இக்காதல் வாழ்விலாவது, ஒரு பெண்ணுக்கு தனது துணையைத் தெரிவு செய்யும் சுதந்திரம் இருக்கிறதா? குறைந்த பட்சம் காதலைத் தெரிவிக்கும் ஒரு ஆணிடம், அவனைப் பிடிக்கவில்லை என்று சொல்லும் உரிமையாவது உள்ளதா? கீழ்க்கண்ட உண்மைக் கதையைப் படியுங்கள்.

நாமக்கல் மாவட்டம், தாண்டா கவுண்டம் பாளையத்தைச் சார்ந்தவர் மாரிமுத்து. கூலித்தொழிலாளியானாலும், தனது மகள்கள் சீமா, மீனா இருவரையும் அருகாமை நகரக் கல்லூரிகளில் சிரமத்துடன் படிக்க வைக்கிறார். ஒரு ஏழைக் குடும்பத்திலிருந்து முதல் தலைமுறையாக கல்லூரிக்கு கல்வி கற்கச் சென்றவர்கள் என்ற முறையில், இருவரும் ஆர்வத்துடன் படிக்கிறார்கள். இளங்கலை மூன்றாமாண்டு படிக்கும் சீமாவை, அவளது உறவுக்காரப் பையனான ஆறுமுகம் தினசரி பின்தொடர்கிறான். கொசு வலை தயாரிப்புத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஆறுமுகம் ஏழாம் வகுப்போடு படிப்பைக் கைவிட்டவன். சீமாவை எப்படியாவது காதலித்தே ஆக வேண்டும் என்பதில் குறியாயிருக்கிறான்.

ஆனால் சீமா அவனது காதலை ஏற்கவில்லை. இருப்பினும் ஆறுமுகத்தின் நச்சரிப்பு தாளாமல், திருமணம் செய்ய வேண்டுமென்றால் தனது தந்தையிடம் பேசுமாறு கூறி, சீமா தவிர்க்கப் பார்க்கிறாள். ஆறுமுகம் விட்டபாடில்லை. தனது சுற்றத்தாருடன் மாரிமுத்துவிடம் பெண் கேட்கச் செல்கிறான். ஆறுமுகம் தூரத்து உறவென்றாலும் சீமாவுக்கு சகோதர உறவுமுறை என்பதால், பெண்தர இயலாது என்று மாரிமுத்து மறுத்துவிட்டார்.

திருமணப் பேச்சு முறிந்தாலும், அந்த இளைஞனின் காதல் உணர்ச்சி அடங்கவில்லை. விடாமல் சீமாவை தொல்லை செய்கிறான். வீட்டுக்குத் தெரியாமல் ஓடிப்போய்த் திருமணம் செய்து கொள்ளலாமென வற்புறுத்துகிறான். இதிலெல்லாம் தனக்கு விருப்பமில்லை என்று, சீமா பலமுறை அவனிடம் பொறுமையாக விளக்கியிருக்கிறாள். இதற்கு மேல் இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று அந்த அபலைப் பெண்ணுக்குத் தெரியவில்லை. எப்படியும் சீமா தனக்குக் கிடைக்க மாட்டாள் என்பதால் ஆறுமுகம் ஆத்திரம் கொள்கிறான்.

இடையில் சீமாவைப் பெண் கேட்டு பக்கத்து ஊரிலிருந்து மாப்பிள்ளை வர இருப்பதாகக் கேள்விப்பட்ட ஆறுமுகம் சினமடைகிறான். தனக்கு கிடைக்காத சீமா யாருக்கும் கிடைக்கக் கூடாது என்று முடிவெடுத்து, கந்தக அமிலத்தை வாங்கிக் கொள்கிறான்.

ஜனவரி 21-ஆம் தேதி அதிகாலையில், வீட்டை ஒட்டியுள்ள ஓலைத் தடுப்பினாலான குளியலறையில் சீமா குளித்துக் கொண்டிருக்கிறாள். தடுப்பைத் தள்ளிவிட்டு உள்ளே நுழைந்த ஆறுமுகம், குப்பியிலிருந்த அமிலத்தை அவளது முகத்தில் வீசுகிறான். முகம் சிதைந்த நிலையில் கதறியழும் சீமாவை, அருகிலிருக்கும் ராசிபுரம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறார், மாரிமுத்து. அங்கு வசதியில்லை என்பதால், சேலம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறாள் அந்த ஏழை மகள். இந்த முகத்தை வைத்துக் கொண்டு அக்காவால் வாழ முடியாதே என்று தங்கை மீனா கதறியழுகிறாள்.

31.01.08 குமுதம் ரிப்போர்ட்டரில், இச்சம்பவத்தை நேரடியாக விசா

**சாதியும், மதமும், வர்க்கமுமே இன்றும் இந்தியாவில் திருமணத்தைத் தீர்மானிக்கும் விதிகளாக இருக்கின்றன. காதலிப்பது ஜாலிக்காக, கல்யாணமாவது செட்டிலாவதற்கு என்ற காரியவாதக் கண்ணோட்டமே இளைஞர்களிடம் மேலோங்கி இருக்கிறது.**


படிப்பகம்

www.padippakam.com

ரித்து எழுதியிருக்கும் நிருபர் கதிரவன், போலீசால் கைது செய்யப்பட்டுள்ள ஆறுமுகத்திடம் பேசிப் பார்க்கிறார். அவன் என்ன சொல்கிறான்? 'நான் ஒன்றும் அவளுடன் ஒட்டிப் பிறந்த சகோதரன் இல்லை. என்னைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகவே இப்படிச் சொல்லி என்னை அசிங்கப்படுத்தி திருப்பி அனுப்பி விட்டார்கள். அதை நம்பி சீமாவும் என்னைத் தவிர்த்தாள். எனவேதான், எனக்குக் கிடைக்காதவள் வேறு யாருக்கும் கிடைக்கவே கூடாது என்பதற்காகவே இப்படி ஒரு காரியத்தைச் செய்தேன்', முகத்தில் சலனமில்லாமல், ஆறுமுகம் கூறிய வார்த்தைகள் இவை.

நேசித்த பெண்ணின் முகத்தைச் சிதைத்து வாழ்வை இருளாக்கியிருக்கும் ஆறுமுகத்தினுடைய அந்தப் பெண் மீதான உறவைக் காதல் என்று அழைக்க முடியுமா? இந்த வக்கிரத்தைக் கண்ட பிறகு எவரும் இதைக் காதல் என்று அழைக்க மாட்டார்கள்தான். எனினும் அறிவுக்குத் தெரிந்திருக்கும் இந்த உண்மை, உணர்ச்சிக்குப் புரிவதில்லை. காதல் குறித்த பிரச்சினைகளை யதார்த்தமாகத் தீர்மானிப்பது உணர்ச்சிதான் என்பதால், பல இளைஞர்கள் அமிலம் வாங்குவதில்லையே தவிர அதற்கு முந்தைய எல்லை வரை வன்முறையை மேற்கொள்கிறார்கள். உடன்பிறந்த ஆணாதிக்கத்தின் வெளிப்பாடுகளான இந்த வன்முறைகளை அவ்வளவு சுலபத்தில் அவர்களுக்கு புரிய வைக்க முடியுமா என்று தெரியவில்லை. ஏனெனில், ஊடகங்களும் சினிமாவும் காதலை ஒரு ஜனநாயகப் பண்பாகக் கற்றுக் கொடுக்கவில்லை.

புத்தாண்டுக்குப் பிறகு பிப்ரவரி 14 காதலர் தினம் இளைஞர்களின் திருவிழாவாக மாறிவிட்டது; இல்லை, மாற்றப்பட்டு விட்டது. என்ன பரிசு கொடுக்கலாம், என்ன வண்ணத்தில் ஆடை அணியலாம், தமிழகத்தில் காதலர்கள் சந்திக்கும் இடங்கள் எவை, பிரபலங்களின் காதல் அனுபவங்கள் என மொத்தத்தில், ஊடகங்களால் காதல் காய்ச்சல் அதிவேகத்தில் சூடேற்றப்படுகிறது. காதல் இல்லாத வாழ்வு ஒரு வாழ்வா என்று, இந்த சூடேற்றலில் இளைஞர்கள் சங்கமிக்கிறார்கள்.



ஆறுமுகத்தினால் சிதைக்கப்பட்ட சீமா.

ஆனால் இந்த நெருப்பில் சமூகத்தின் பிற்போக்குத்தனங்கள் எவையும் எரிக்கப் படுவதில்லை. காதலையும் ஒரு நுகர்பொருளாகப் பாவிக்கக் கற்றுக் கொடுக்கும் இந்தக் கண்ணோட்டம், உண்மையில் இந்தியாவில் காதலின் தேவை குறித்தும், அதன் பிரச்சினைகளைக் குறித்தும் கடுகளவு கூட சொல்லிக் கொடுப்பதில்லை. சாதியும் மதமும் மாறி காதலித்த 'குற்றத்திற்காக' உயிரோடு எரிக்கப்பட்ட காதலர்களின் கதையை எந்த ஊடகமும் கவலையோடு கூட வெளியிடுவதில்லை.

அதனால்தான் சாதியும், மதமும், வர்க்கமுமே இன்றும் இந்தியாவில் திருமணத்தைத் தீர்மானிக்கும் விதிகளாக இருக்கின்றன. காதலிப்பது ஜாலிக்காக, கல்யாணமாவது செட்டிலாவதற்கு என்ற காரியவாதக் கண்ணோட்டமே இளைஞர்களிடம் மேலோங்கி இருக்கிறது. அவ்வகையில் இவர்கள், காதலின் இலக்கணத்தையும் தொழில் நுட்பங்களையும் தமிழ் சினிமாவிலிருந்துதான் கற்றுக் கொள்கிறார்கள்.

முக்கியமாக இளைஞர்களின் காதல் பார்வையை அநேகமாக சினிமாதான் தீர்மானிக்கிறது. காதல் வயப்படுவதன் அடிப்படை இனக் கவர்ச்சி என்ற உயிரியல் உறவில் இருக்கிறது என்றால், யாரை, ஏன், எப்படிக் காதலிப்பது என்ற பரிசீலனையை பண்பாட்டின் தரம் முடிவு செய்கிறது. குறிப்பாக ஆண்கள் இந்தத் தரத்தை தமிழ் சினிமாவிலிருந்துதான் பெறுகிறார்கள். சமூக நிலையில் இன்னமும் சமத்துவத்தை அடைய முடியாத பெண்களுக்கு, பொதுவாக, காதலுக்கான முன்முயற்சிகளைச் செய்வதற்கு வாய்ப்பில்லை. அந்த வாய்ப்பை உரிமையாகப் பெற்றிருக்கும் ஆண்கள், அதை எப்படிக் கையாளுகிறார்கள்?

கடைசியாக வந்த ரஜினியின் சிவாஜி படம் வரை, எல்லா திரைப்படங்களிலும் நாயகனாக வரும் ஆண்கள், பெண்களை விரட்டி, விரட்டி காதலிக்கிறார்கள், காதலித்தே ஆக வேண்டுமென்று நிர்ப்பந்தப் படுத்துகிறார்கள். சில சமயங்களில் மிரட்டுகிறார்கள்; சில இடங்களில் எப்படியும் காதலிப்பேன் என்று சவால் விடுகிறார்கள். புதிய பாதை போன்ற படங்களில், கற்பழித்து விட்டு கல்யாணம் தன்னோடுதான் என்று வேறு வழியில்லாமல் செய்து விடுகிறார்கள். நீ ஒருவனைக் காதலிப்பதை விட உன்னைக் காதலிப்பவனை காதலிப்பதே சிறந்தது என்று உபதேசிக்கிறார்கள். இப்படி காதலுக்கு மசியாத நாயகியை வீழ்த்துவதற்கு எல்லா வித்தைகளையும் செய்கிறார்கள்.

காரல் மார்க்ஸ் தனது மருமகனுக்கு எழுதிய கடிதமொன்றில், மென்மையாக வெளிப்படுத்தப்படும் காதலில்தான் அழகிருக்கிறது என்று தான் கருதுவதாகக் குறிப்பிடுகிறார். ஒரு பெண்ணுடன் உள்ள உறவு அல்லது நட்பின் அடிப்படையில் அவள் மீது காதல் தோன்றும்போது, அதனை அவ

www.padippakam.com

ளிடம் தெரிவிப்பதில், ஆணுக்கு மிகுந்த எச்சரிக்கையும் நிதானமும் வேண்டும். இது பழமை வாதமல்ல. இந்த அணுகுமுறையில்தான், ஒரு பெண்ணுடைய ஆளுமையின் மீது அந்த ஆண் கொண்டிருக்கும் மதிப்பு வெளிப்படுகிறது.

ஆனால் தமிழ்த் திரைப்படங்கள், ஒரு பெண்ணை வென்று அடக்க வேண்டிய விலங்காகவே கருது கின்றன. ஒரு வரியில் சொல்வதானால், இதுதான் பச்சையான ஆணாதிக்கம்! இப்படித்தான் நமது இளைஞர்கள் பெண்களின் பின்னால் சுற்றுவதும், கவருவதும், தொல்லைப்படுத்துவதுமாக இருக்கிறார்கள். ஆணையும், பெண்ணையும் இருவேறு உலகமாகப் பிரித்து வைத்திருக்கும் இந்தியச் சமூக அமைப்பு, இந்தத் தொல்லைக் காதலை வளர்ப்பதற்கு ஏதுவாக இருக்கிறது.

இத்தகைய 'காதல்' உணர்வே, பெண்ணை தன்னால் காதலிக்கப்பட வேண்டிய அடிமையாக நினைக்கிறது. தான் நினைத்து விரும்பியதாலேயே ஒரு பெண் தன்னைக் காதலிக்க வேண்டும் என்றுதான் ஆண்கள் நினைக்கிறார்கள். தன்னைப் போலவே ஒரு பெண்ணுக்கும் சுயமதிப்பும், தெரிவு செய்யும் விருப்பமும், நிராகரிக்கும் உரிமையும் இருப்பதாக ஒரு ஆண் கனவிலும் நினைப்பதில்லை. பெண்களைப் பொறுத்த வரை தங்களை அடிமை போல பாவிக்கும் இந்த அணுகுமுறை குறித்து கவலைப் படுவதை விட, தமது எதிர்கால வாழ்க்கையின் பாதுகாப்பு குறித்தே கவலைப் படுகிறார்கள். ஆக ஒரு பெண்ணை உடைமையாகக் கருதும் ஆண்களின் நினைப்பை கேட்பதற்கு ஆளில்லை என்பதால், ஆண்களின் காதல் முதல் முயற்சியே வன்முறையாக இருக்கிறது.

வாழ்க்கை உருவாக்கியிருக்கும் எல்லா உறவுகளிலும் மகிழ்ச்சி, துன்பம், பிரிவு, உறவு, ஏமாற்றம் எல்லாம் கலந்திருக்கிறது. அதில் ஒரு தலைக் காதல் வயப்பட்டு பின்னர் அந்தக் காதல் நிராகரிக்கப்படும் சூழ்நிலையில், ஒரு ஆணின் கவலை மட்டும் பாரதூரமாக மாறுகிறது. தனக்கு அடங்கிக் கிடக்க வேண்டிய ஒரு பெண், தன்னை மறுப்பதால் ஆண்கள் தமது சுயகௌரவம் பாதிக்கப்படுவதாகத் துயரப் படுகிறார்கள். இதே மறுப்பு ஒரு பெண்ணுக்கு நடந்திருந்தால், ஆண் அளவுக்கு அவள் கவலை கொள்ள வாய்ப்பில்லை. ஏனெனில் வரலாறு அவளை நடத்தியிருக்கும் விதமும், பயிற்றுவித்திருக்கும் முறையும் வேறு. அடிமைகள் ஆண்டான்களின் மீது உரிமை பாராட்ட முடியாதல்லவா!

அதிலும் தான் மட்டும் உரிமையுடன் உறவு கொள்ளவேண்டிய அந்த பெண்ணுடம்பை வேறு ஒரு ஆண் உடைமையாக்கப் போகிறான் என்பது தெரிந்தால், காதல் மறுக்கப்பட்ட அந்த ஆண் வெறி கொள்கிறான். இந்த விசயம் எந்த அளவுக்கு அவனைச் சித்திரவதை செய்கிறதோ, அந்த அளவுக்கு அவனது இரவுப் படுக்கை தூக்கமில்லாமல் கழிகிறது. சமயத்தில் அமிலத்தை எறியவும் துணிகிறது. அந்த அளவுக்கு விகாரமாகப் போகாத மனம் தற்கொலைக்குத் துணிகிறது. தனது அதிகாரம் செல்லுபடியாகாத எல்லா வகை ஆதிக்கங்களும், இப்படித்தான் இறுதியில் ஒரு 'அவலத்தில்' முடிகின்றன.



வாழ்வின் இளமைக் காலத்தில் காதல் தோல்வியால் வரும் இந்தத் துன்பியல் பருவத்தை எல்லா ஆண்களும் கடந்துதான் வருகிறார்கள் என்றாலும், அதன் மூலமான ஆணாதிக்க மனோபாவத்தை அவர்கள் புரிந்து கொள்வதில்லை. மறுக்கப்பட்ட காதலில்தான், ஆணாதிக்கம் தனது சுயரூபத்தை அப்பட்டமாக வெளிப்படுத்திக் கொள்கிறது.

இதனால் காதலில் வெற்றிபெறும் ஆண்களெல்லாம் புனிதர்கள் என்று பொருளல்ல. காதலின் காலத்தில் பெண்ணுக்கு சமத்துவத்தை 'வழங்கும்' இவர்கள், திருமணத்திற்குப் பின்னர் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறார்கள். காதலின் போது மறைந்து கொள்ளும் ஆணாதிக்கம், இப்போது வெடித்துக் கொண்டு கிளம்பும். காதல் ஒரு மனிதனைத் திருத்தி நல்வழிப்படுத்தும் வல்லமை உள்ளதாக திரைப்படங்கள்தான் சித்தரிக்கின்றன. வெற்றிபெறும் ஒரு ஆணுக்குப் பின்னால் ஒரு பெண் சாக வேண்டும் என்ற புத்திமதியை வழங்கும் இச்சித்தரிப்புக்கு அப்பால், உண்மையில் காதல் ஒரு ஆணை நல்லவனாக மாற்றிவிடுமா? குறைந்த பட்சம் ஒரு பெண்ணுக்கு எல்லா விசயங்களிலும் இருக்கும் ஜனநாயக உரிமையையாவது அங்கீகரிக்கச் செய்யுமா?

பார்ப்பனியத்தின் நிச்சயிக்கப் பட்ட திருமணத்தை விட காதல் மேலானதுதான். காதலின் போது சில நல்ல விசயங்கள் குறுகிய காலத்திற்காவது நடக்கலாம். இதைத் தாண்டி ஒரு ஆணுக்கு முதிர்ச்சியான ஜனநாயகப் பண்பினை வழங்கும் வல்லமை ஏதும் காதலுக்கு இல்லை. பெரும்பாலும் ஒரு சமூகத்தின் அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் தரத்தின் அளவிற்கேற்பத்தான் அச்சமூகத்தில் நிலவும் காதலின் தரமும் தீர்மானிக்கப்படுகிறது.

காதல் ஒரு ஆணையோ பெண்ணையோ, தானே முற்போக்காளனாக மாற்றி விடுவதில்லை. தெளிவாகச் சொல்வதாக இருந்தால், ஒரு ஆண் தனது சமூக வாழ்வில் எந்த அளவு ஜனநாயக நடைமுறையைக் கொண்டிருக்கிறானோ, அந்த அளவு தான் அவனுடைய காதலிலும் பிரதிபலிக்கிறது. மற்ற மக்களின் ஜனநாயக உரிமையையும் சுயமரியாதையையும் மதிக்கப் பழகாத ஆண், எத்தனை படித்திருந்தாலும், அமெரிக்கா போன்ற



படிப்பகம்

www.padippakam.com

நாடுகளில் குடியேறியிருந்தாலும், அவன் மீது ஜனநாயகத்தின் வாசனை கூட ஒட்டுவதில்லை.

சொல்லப்போனால், தமது சமூக வாழ்க்கையில், ஜனநாயகத்துக்கான போராட்டங்களில் ஈடுபடும் ஆண்களிடம் கூட ஆணாதிக்கத்தின் எச்ச சொச்சங்கள் நீடிக்கத்தான் செய்கின்றன. முற்போக்கான இளைஞர்கள் தமது காதல் நிராகரிக்கப்படும் போது, மற்ற ஆண்களைப் போல எல்லை மீறுவதில்லை. ஆனால் பெண்ணை உடைமையாகக் கருதும் மனோபாவத்தில் ஊறியிருப்பதால், 'தான் உரிமை கோர முடியாத தனது உடைமை குறித்து' சிந்தித்து சிந்தித்து மன உளைச்சலில் வீழ்கிறார்கள். தங்களை வருத்திக் கொள்கிறார்கள். இது தவறு என்பதை அறிவு ரீதியாக மேலோட்டமாக ஏற்றுக் கொண்டாலும், உணர்ச்சித் தளத்தில் சராசரி ஆணாகவே இருக்கிறார்கள்.

பெண் என்பவள் வெறும் உடல் அல்ல என்பதைக் கருத்து ரீதியாக ஏற்றுக் கொண்டிருந்தாலும், சமூகத்தில் நிலவும் பண்பாடும், ஊடகங்களின் தாக்குதலும் பெண்களைப் பாலியல் நோக்கில் பார்ப்பதற்கு மட்டுமே அவர்களையும் பழக்கப் படுத்துகின்றன. எனவே, அவர்களுக்கே தெரியாமல் அவர்களுக்குள் ஆணாதிக்கம் துளிர் விட்ட வண்ணம் இருக்கிறது.

இதைக் களையெடுக்க வேண்டுமானால், அதற்குப் பெண்களின் உதவியும் தேவைப்படுகிறது. ஏராளமான பெண்கள் சமூக வாழ்க்கையில் ஈடுபடும்போதுதான், பாலினக் கவர்ச்சிக்கு அப்பாற்பட்ட ஆண்-பெண் உறவு சாத்தியமாகிறது. பெண்கள் சமூக மாற்றத்துக்கான நடைமுறையில் ஈடுபடும் போதுதான், ஆணாதிக்கம் என்ற ஒன்றையே அவர்களால் அடையாளம் காண முடிகிறது. அதற்கெதிராகப் போராடவும் முடிகிறது.

**ஒரு பெண்ணுடன் உள்ள உறவு அல்லது நட்பின் அடிப்படையில் அவள் மீது காதல் தோன்றும்போது, அதனை அவளிடம் தெரிவிப்பதில், ஆணுக்கு மிகுந்த எச்சரிக்கையும் நிதானமும் வேண்டும். இது பழமை வாதமல்ல. இந்த அணுகுமுறையில்தான், ஒரு பெண்ணுடைய ஆளுமையின் மீது அந்த ஆண் கொண்டிருக்கும் மதிப்பு வெளிப்படுகிறது.**

அந்த வாய்ப்பை வழங்குவதற்கு பெண்கள் வேண்டும். அதுவும் சமூகப் போராட்ட நடைமுறைகளில் உற்சாகமாக ஈடுபடும் பெண் தோழர்கள், ஆயிரக்கணக்கில் வேண்டும். ஆண் மட்டுமல்ல பெண்ணும் தனது குடும்ப வாழ்க்கைக்கு வெளியே சமூக நலனுக்காகப் போராடும் போது மட்டுமே, ஆணாதிக்கத்தின் சுவடுகளை உருத் தெரியாமல் அழிப்பதற்கான களம் உருவாகும். அப்போதுதான் ஆணாதிக்கத்தையும், 'நல்லெண்ணம் கொண்ட ஆணாதிக்கத்தையும்' கூட முறியடிக்க முடியும்.

நிலப்பிரபுத்துவ, சாதியக் கொடுங்கோன்மை புரியும் நிலப்பிரபுக்களையும், முதலாளித்துவச் சரண்டல் செய்யும் முதலாளிகளையும் இறுதியில் வீழ்த்துவதற்கு, அவர்களால் ஒடுக்கப்படும் மக்கள் விழிப்புணர்வு பெற்றுப் போராடினால்தான் முடியும். இந்த உண்மை ஆணாதிக்கத்துக்கும் பொருந்தும். அத்தகைய விழிப்புணர்வைப் பெறாதாவரை, பெண்களுக்கும் விடுதலை கிடைக்கப் போவதில்லை.

மாணவி சீமாவுக்கு நடந்த கொடுமையை எதிர்த்து, அவள் படிக்கும் கல்லூரியில் கூட எந்தப் போராட்டத்தையும் மாணவிகள் நடத்தவில்லை. ஏனென்றால், பாலியல் கொடுமைகளால் தினம் தினம் புழுங்கித் தவிக்கும் பெண்கள், சீமாவின் பிரச்சினையை அவளுடைய தனிப்பட்ட பிரச்சினையாக மட்டுமே பார்த்திருக்கிறார்கள். இதனை உருவாக்கி உலவ விடும் ஆளும் வர்க்க பண்பாட்டு நிறுவனங்களை, மாபெரும் இயக்கமாகி எதிர்க்காத வரையில், தனிப்பட்ட பெண்ணுக்கு நடக்கும் கொடுமைகள் நிற்கப் போவதில்லை. ஆணாதிக்கத்தின் 'அன்பு', பெண்களை அமிலமாகச் சுடுவதும் நிற்கப் போவதில்லை.

• இளநம்பி


## தில்லைச் சிற்றம்பல மேடையில் தமிழ் முழங்குவோம்!

**சனவரி 26, 2008 அன்று சிதம்பரத்தில் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்ட உரைகள்.**

**மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வெளியீடு**

• வழக்குரைஞர் **இராஜு** • முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் **வி.வி.சாமிநாதன்**
• ம.க.இ.க. பொதுச்செயலர் தோழர் **மருதையன்** • பேராசிரியர் **பெரியார்தாசன்**


ஆகியோரின் உரைகள் அடங்கிய ஒலிக்குறுந்தகடு விலை: ரூ. **30/-** (அஞ்சல் செலவு தனி)

**கிடைக்குமிடங்கள்:**

**கீழைக்காற்று வெளியீட்டகம்,** 10 அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002.
தொலைபேசி: 044-28412367

**புதிய கலாச்சாரம்,** 16, முல்லைநகர் வணிக வளாகம், 2-வது நிழற்சாலை, அசோக்நகர், சென்னை - 600 083. தொலைபேசி: 044-23718706

www.padippakam.com



# அமெரிக்க சிந்துபாத்களும் பின்லேடன் வேட்டையும்!

காலகாலமாய் கன்னித்தீவைத் தேடும் சிந்துபாத் கதை, நாம் அறிந்தது. ஏறத்தாழ ஆறாண்டுகளுக்கு முன்பு, செப் 11, 2001–க்கு பிறகு தொடங்கிய ஒசாமா வேட்டை, சிந்துபாத் கதைக்கு சற்றும் குறைந்ததல்ல. ''அதெப்படி, எந்நேரமும் ரோந்து செல்லும் எண்ணிலடங்கா ஆளில்லா விமானங்கள், அலசி ஆராயும் உளவு செயற்கைக் கோள்கள், அதி நவீனப் பயிற்சி பெற்ற கமாண்டோப் படைகள், மில்லியன் கணக்கிலான பரிசுத் தொகை... இத்தனை இருந்தும், மத்திய காலத்து மனப்போக்கு கொண்ட, உடல் நலிந்துள்ளதாகக் கூறப்படும் ஒரு நடுத்தர வயது மதவெறியனை, உலகின் மாபெரும் சூப்பர் வல்லரசால் ஏன் பிடிக்க முடியவில்லை?'' என அமெரிக்க **நியூஸ்வீக்** இதழ் கடந்த ஆண்டு செப்டம்பரில் பொருமிப் போய் எழுதியது.

உண்மைதான், பரந்து விரிந்த ஆப்கானிஸ்தானின் எல்லையோர மலைப் பகுதிகளில் ஒசாமா பதுங்கியிருப்பதாக துவக்கத்தில் கலர் கலராகப் படம் ஓட்டிய அமெரிக்க அரசும், 'உயிருடனோ, பிணமாகவோ ஒசாமாவைப் பிடித்தே தீருவோம்' எனக் கொக்கரித்த ஜார்ஜ் புஷ்ஷும், இன்றைக்கு ஒசாமா குறித்து வாய் திறக்க மறுக்கிறார்கள். 2004–ல் தமது ஒன்றிய உரையில் 15 முறை ஒசாமாவைப் பற்றிக் குறிப்பிட்ட ஜார்ஜ் புஷ், அடுத்த ஆண்டு முதல் ஒசாமா குறித்து ஒரு வார்த்தை கூடப் பேசுவதில்லை.

2001 செப்டம்பரில், அப்போதைய சி.ஐ.ஏ பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவின் தலைவர் காஃபர் பிளாக், புஷ்ஷிடம் ''பின்லேடன் தலையைக் கொய்து வந்து உமது காலடியில் சேர்ப்போம் மன்னா'' என வீர சபதம் ஏற்றாராம். உடனடியாக, பின்லேடன் தலையைக் கொண்டு செல்ல, ஆப்கன் அதிகாரிகள் ஐஸ்பெட்டி ஆர்டர் செய்தார்களாம். ஆறாண்டுகளாக, சீந்துவாரற்றுக் கிடக்கும் ஐஸ்பெட்டி மட்டும்தான் மிச்சம். ஒசாமா கிட்டியபாடில்லை. 2001–லிருந்து பயங்கரவாத ஒழிப்புப் போரின் 'நம்பகமான' கூட்டாளியான பாகிஸ்தானுக்கு ஒசாமா வேட்டைக்காக, இதுவரை 10 மில்லியன் டாலரை வாரி வழங்கியிருக்கிறது அமெரிக்கா. ஆனால், ஜனவரி 2008-இல், பிரான்சில் நடந்த ஒரு கருத்தரங்கில் பேசிய பாக். அதிபர் முஷாரப், ''பின்லேடனைப் பிடிப்பது அத்துணை முக்கியமானதல்ல'' என்றார். ஏன் திடீரென பழம் புளிப்பதாய் நரிகள் அலுத்துக் கொள்கின்றன?

'பயங்கரவாதத்தின் கோரப் பிடியிலிருந்து உலகைக் காப்பாற்ற வேண்டிய உடனடிப் புனிதப் பணியை சிரமற்கொண்டு ஆற்றி வரும்' அமெரிக்க அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள்? ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல, சி.ஐ.ஏ.வின் தெற்காசிய நிபுணராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற புரூஸ் ரெய்டல் கூறுகிறார், ''டிசம்பர் 2001-இல் தோரா போரா மலைச் சண்டையில் ஒசாமா தப்பிச் சென்ற பிறகு, அந்த வேட்டையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. உண்மையில் இப்பொழுது நாம் இலக்கற்று இருளில் சுட்டுக் கொண்டிருக்கிறோம். எந்தத் தோட்டாவும் இலக்கைத் தாக்குமா என்பதற்கான சாத்தியப்பாடுகள் பூஜ்யமே''.



பின்லேடன், அமெரிக்காவின் தங்க வாத்து!

என்ன வேடிக்கை, வேற்று கிரகவாசிகளைக் கூட அமெரிக்க ஹீரோக்கள் அடித்துத் துவம்சம் செய்கிறார்கள். ஆனால், ஒரு வறண்ட மலைப் பகுதியில், சில நூறு வீரர்களோடு ஒளிந்திருப்பதாகச் சொல்லப்படும் பின்லேடனைப் பிடிக்க அமெரிக்க ராம்போக்களால் முடியவில்லை. ஆக, உலகின் அதி பயங்கரவாதி ஒசாமா உண்மையில் எங்குதான் இருக்கிறார்? ஏன் அவரைப் பிடிக்க முடியவில்லை?

பின்லேடன் பதுங்கி இருப்பதாகச் சொல்லப்படும் ஆப்கானிஸ்தானுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையேயான எல்லைப்பகுதி 1500 மைல்கள் நீளம் கொண்டது. வஜிரிஸ்தான், குர்ரம் உள்ளிட்ட பகுதிகளை உள்ளடக்கிய, சாலை வசதிகளற்ற, கரடு முரடான இம்மலைப் பகுதிகள், பல நூற்றாண்டுகளாக குறிப்பிட்ட எந்த அரசின் ஆளுகைக்கும் உட்பட்ட பகுதியாக இருந்ததில்லை. போர்க்குணமிக்க பத்தான் இனத்தைச் சேர்ந்த பழங்குடியினரின் தன்னாட்சிப் பகுதியாக இது விளங்கி வருகிறது. அக்டோபர் 2001 வரை பாகிஸ்தான் இராணுவம், தான் உருவாக்கப்பட்ட ஐம்பது ஆண்டு காலத்தில் ஒரு முறை கூட இப்பகுதிக்குள் நுழைந்ததில்லை. இன்று சுமார் 70,000 படையினரை தனது எல்லையில் நிறுத்தி வைத்திருக்கிறது பாகிஸ்தான்.

ஒசாமாவை ஏன் பிடிக்க முடியவில்லை என்ற கேள்விக்கு, அமெரிக்க அதிகாரிகள் பல காரணங்களைச் சொல்லி அலுத்துக் கொள்கிறார்கள். முதலாவது காரணமாக அவர்கள் முன்வைப்பது, இராக் யுத்தத்தைத்தான். இராக் யுத்தம் தொடங்கிய பிறகு ஆப்கானிஸ்தானில் இயங்கிக் கொண்டிருந்த பெரும்பான்மைப் படையினர், இராக்கிற்கு அனுப்பப்பட்டு விட்டனர் என்கின்றனர். ஆனால், அமெரிக்க இராணுவமோ அதிகாரப்பூர்வமாக தெளிவான கருத்து சொல்ல மறுக்கிறது. வழக்கமான சுழற்சிகள் மட்டுமே நடைபெறுவதாகவும், ஒசாமா வேட்டையைத் தேக்கப்படுத்தும் நோக்கம் இல்லையெனவும் கூறுகிறது. ஆனால், இராக்கில் மீள முடியாத புதைகுழியில் அமெரிக்க இராணுவம் சிக்கிக் கொண்டிருப்பது உலகறிந்தது.

மேலும், பாகிஸ்தான் இராணுவத்தினரின் ஒத்துழைப்பும் அரை மனதோடுதான் இருக்கிறது என சி.ஐ.ஏ. அதிகாரிகள் குறை கூறுகிறார்கள். பாகிஸ்தான் அதிகாரிகளோ இதனை ஏற்க மறுக்கி


படிப்பகம்

www.padippakam.com

றார்கள். தாலிபான்கள் மீண்டும் வலுப் பெற்று வருவதால், அமெரிக்காவை விட தங்களுக்கே அபாயம் அதிகம் இருப்பதாகவும், அதனால் தாங்கள் முழுமுனைப்போடு தேடுதலில் ஈடுப டுவதாகவும் பாக். இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர்.

இன்னொருபுறம், 2005–இல் அமெரிக்க ஏ.பி.சி. செய்தி நிறுவனத் திற்குப் பேட்டியளித்த முஷாரப், பின் லேடனின் புகழ் காரணமாக, பின்லே டன் பாகிஸ்தானில் பிடிபடுவதை விட, ஆப்கானிஸ்தானில் அமெரிக் கர்களால் கைது செய்யப்படுவதையே தான் விரும்புவதாகத் தெரிவித்தார். பாகிஸ்தானின் **உம்மத்** எனும் நாளிதழ் தனது பத்திரிக்கை முகப்பில், இன் றளவும் அன்றாடம் பின்லேடன் புகைப்படம் தாங்கியும், அவரது பொன்மொழிகளோடும்தான் வெளி வருகிறது. பின்லேடன் புகைப்படம் கொண்ட டி–சர்ட்டுகள் அதிக அளவில் விற்பனையாகின்றன. இந்நிலையில் பின்லேடன் ஒருவேளை பாகிஸ் தானில் பிடிபட்டால், அது ஒரு தீராத கொந்தளிப்பை உருவாக்கும் என பாக். அரசு அஞ்சுகிறது.

இவற்றையெல்லாம் விட, சி.ஐ.ஏ அதிகாரிகளை அயர்ச்சிக்குள்ளாக்கும் விசயம், பின்லேடன் தலைக்கு 25 மில் லியன் டாலர் விலை நிர்ணயித்தும், ஒரு விசுவாசி (கைக்கூலி) கூட முன்வர வில்லை என்பது தான். பின்லேடனைப் பிடிப்பதற்கான முதலாவதும், கடைசி யுமான கள நடவடிக்கையில் ஈடுபட்ட கேரி பெர்ன்ஸ்டன் என்ற அதிகாரி 2006–இல் ஒரு பேட்டியில் சொல் கிறார், ''இவை அனைத்தும் நாளைக்கே கூட முடியலாம், தேவைப் படுவதெல்லாம் ஒரு திடீர் சோதனை, பரிசுத் தொகைக்காக ஆசைப்படும் ஒரு பழங்குடி மனிதன், அமெரிக் காவில் தனது குழந்தைகளைப் படிக்க வைக்க விரும்பும் ஒரு ஆள்காட்டி போதும். இவை அனைத்தும் முடி வுக்கு வந்து விடும்.'' ஆனால் ஆறாண் டுகளாக பெர்ன்ஸ்டன் ஆசைப்படும் அப்படி ஒரு 'நாள்' வரவேயில்லை.

அதற்கு இரு காரணங்களைச் சுட்டிக் காட்டுகிறார்கள். ஒன்று, பத்தான் இனத்தவரின் பாஸ்தூன்வாலி எனப்படும் பாரம்பரிய விதி. அதன்படி, விருந்தினராக ஏற்றுக் கொண்டவரை உயிரே போனாலும் பாதுகாப்பது. எனவே, உளவாளிகளை உருவாக்குவதோ, கருங்காலிகளை உருவாக்கி அல்காய்தாவிற்குள் ஊடுரு

**உண்மையில், பின்லேடன் பிடிபட்டாலும் சரி, பிடிபடாவிட்டாலும் சரி, இரண்டு நிலைகளுமே அமெரிக்காவின் உலக சாம்ராஜ்யக் கனவிற்கு வலுச்சேர்க்கவே செய்யும். ஏனெனில், எண்ணெய் யுத்தத்திற்கும், ஆசியக் கண்டத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும், தனது துருப்புச்சீட்டாக இசுலாமியப் பயங்கரவாதத்தைத்தான் அமெரிக்கா பயன்படுத்தி வருகிறது.**

வுவதோ சாத்தியமற்றதாக உள்ளது என நொந்து கொள்கிறார்கள். இரண்டு, மே 2005–க்கு பிறகு மட்டும், அதாவது தாலிபான்களும், அல்காய்தாவும் முடங்கி விட்டதாகச் சொல்லப்படும் சூழலில், இதுவரை 23 மூத்த தாலிபான் எதிர்ப்பு-அரசு ஆதரவு பழங்குடித் தலைவர்கள் வெட்டிக் கொலை செய் யப்பட்டுள்ளனர். எனவே, அல்காய் தாவின் நிழல் எங்கும் படர்ந்திருப்பதா கவும், பயபீதி காரணமாக மக்கள் முன் வரத் தயங்குவதாகவும் கூறி, தமக்குத் தாமே சமாதானம் செய்து கொள்கின் றனர்.

ஆனால், உண்மைக் காரணத்தை யூசுப்சாய் எனும் பாக். பத்திரிக் கையாளர் அம்பலப்படுத்துகிறார். ''கணக்கற்ற கிராமங்களில் வெடி குண்டுத் தாக்குதல்களை நடத்தியிருக் கிறார்கள். அதன் விளைவாக, ஒவ்வொரு கிராமமும் அமெரிக்க– பாக் எதிர்ப்புக்குத் திரும்பியிருக்கிறது. இப்பொழுது படைகள் நடமாடவே முடிவதில்லை. எங்கு பார்த்தாலும் தாக் கப்படுகிறார்கள்.'' ஒருபுறம், தங்களது கைகள் கட்டப்பட்டிருப்பதாகப் பம் மாத்து பண்ணும் சி.ஐ.ஏ அதிகாரிகள்; மற்றொரு புறம், கேள்வி கேட்பாரின்றி ஏவுகணைத் தாக்குதல்களைத் தொடுப் பதும், அப்பாவி மக்கள் கொல்லப் பட்டு, அதன் விளைவாக கொதித் தெழும் மக்கள் அணிதிரண்டு போராடு வதும் ஆப்கானில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்துள்ளன. ஒரு கட் டத்தில், 2006–ல், வேறு வழியின்றி பாக். அரசு பழங்குடித் தலைவர்க ளுடன் சமாதான ஒப்பந்தத்திற்கும் சென்றது. அமெரிக்காவினால் வழிந டத்தப்படும் பாக். படையினரின் மனித உரிமை இலட்சணம் எப்படியிருக்கும் என்பதற்கு ஆதாரங்கள் வேண்டுமா என்ன?

கிளைக் கதையாக, 2004–ல் ஜாக் இடெமா என்ற முன்னாள் அமெரிக்க இராணுவ அதிகாரி, தாமாக ஆப்கா னிஸ்தானில் சிலரை இரகசியமாக அடைத்து வைத்து சித்திரவதை செய்து வந்துள்ளான். தலைகீழாகப் பல நாட்க ளுக்கு கட்டித் தொங்கவிட்டு, அல்காய் தாவிடம் தமக்குத் தொடர்பிருப்பதாக ஒத்துக் கொள்ளுமாறு துன்புறுத்தி யுள்ளான். எந்த அமெரிக்கச் சொறி நாய் வேண்டுமானாலும், சி.ஐ.ஏ அதிகாரி என்ற போர்வையில் ஆப் கானில் விசாரணை நடத்த முடியும் என்றால், ஆப்கானில் வழங்கப்பட்ட 'சுதந்திரத்தின்' இலட்சணத்தைப் புரிந்து கொள்ளலாம். பின்னர், பலர் மர்மமான முறையில் காணாமல் போக, ஆப்கான் இராணுவம் சோதனை செய்ததில் இடெமா பிடிபட்டான்.

விசாரணையில் அமெரிக்க இரா ணுவத்தின் ஒப்புதலுடன்தான் இவ்வாறு தான் செய்ததாகக் குறிப் பிட்டான். ஆனால், அமெரிக்க இரா ணுவம் இதனை மறுத்தது. இடெ மாவின் மனநிலையைப் பரிசோதிக் குமாறு அறிவுறுத்திய ஆப்கான் நீதி மன்றம், 10 ஆண்டு சிறைத் தண்டனை விதித்தது. ஆனால் மூன்றாண்டுகளில் அவன் விடுதலை செய்யப்பட்டு, அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப் பட்டான். என்ன இருந்தாலும் அமெ ரிக்கப் பைத்தியங்களுக்கு சலுகை காட் டாமல் இருக்க முடியுமா?

''பின்லேடன் பயந்து பின்வாங்கி விட்டான், அதனால்தான் அவனை பிடிக்க முடியவில்லை'' எனச் சில 'நிபு ணர்கள்' கருத்து தெரிவிக்கிறார்கள். பின்லேடனைச் சுற்றி, பல மைல் தூர இடைவெளியில், பழங்குடிப் படை களின் மூன்று பாதுகாப்பு வளை யங்கள் இருப்பதாகவும், அதனால் பின்லேடனை நெருங்குவதற்குள் தகவல் பரிமாறப்படுவதாகவும், ஒரு சுவாரஸ்யமான திரைக்கதை சொல்கி றார்கள். 2001–க்குப் பிறகு பின்லே டனின் ஒளி நாடாக்கள் வெளியிடப் படுவதில்லை, மேலும் ஒலி நாடாக்கள் வருவதும் நின்று விட்டன என்றும், அதனால் அவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டிருக்கலாம் என்றும் சொல்கின்றனர். பின்லேடனுக்கு சிறுநீ ரகக் கோளாறு இருக்கலாம் என மருத்து

www.padippakam.com

வர்கள் ஊகிப்பதாகத் தெரிவிக்கிறார்கள்.



ஆப்கானில் அட்டூழியம் செய்யும் அமெரிக்க ராம்போக்கள்!

ஏன், பின்லேடன் மரித்து விட்டிருக்கலாம் எனக் கூட சிலர் கருத்து தெரிவிக்கின்றனர். சில அதிகாரிகள் ''பின்லேடன் இந்துகுஷ் மலையில் இல்லை, ஏதோ ஒரு பாகிஸ்தான் கிராமத்தில் தான் அமைதியாக இருக்க வேண்டும்'' என மர்ம நாவல்களை உருவாக்குகிறார்கள். இவ்வாறு குருடர்கள் யானையைத் தடவி விவரித்த கதையாக, அமெரிக்கப் பத்திரிக்கையாளர்களின் ஆர்வக் கோளாறுக்கு, ஆளாளுக்கு ஒரு கதை சொல்கிறார்கள்.

மொத்தத்தில், ஆறாண்டுகளுக்கும் மேலாக 24 மணி நேரமும் ஆப்கானில் ஊர்திகள் நடமாட்டத்தை செயற்கைக் கோள்களால் கவனித்து வரும், உலகிலேயே அதி நவீனமான அமெரிக்க உளவு வலைப்பின்னலில், பின்லேடனின் ஒரு செயற்கைக்கோள் தொலைபேசி அழைப்போ, ஒரு சிறு மின்னணுத் தகவலோ கூட சிக்கவில்லை. நூற்றுக்கணக்கான அல் காய்தா உறுப்பினர்களை ஆறாண்டுகளில் பிடித்திருப்பதாகச் சொன்னாலும், அல்காய்தாவின் உள்வட்டத்திற்குள் சி.ஐ.ஏ நுழைய முடியவில்லை. மிக நவீன எதிரியை, பின்லேடன், மிகப் பழைமையான முறையில் வெற்றி கொண்டார்.

இது வரை பின்லேடன், அல் ஜவாஹிரியால் வெளியிடப்பட்ட 23 ஒலி–ஒளி நாடாக்களும் நேரடியாக, நாடாக்களின் உள்ளிருக்கும் தகவல் என்னவென்று அறியாத நபர்களால் அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு கொண்டு சேர்க்கப்பட்டன அல்லது தபால் செய்யப்பட்டன. அல்காய்தாவின் தகவல்கள் அனைத்தும் வாய்மொழியாகவும், காகிதக் குறிப்புகளாகவுமே பரிமாறப்படுப்பவதாக அல்காய்தா ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர். எனவேதான், ''பின்லேடன் ஆட்கள் யாராவது தாமாகவே அமெரிக்கத் தூதரகத்திற்கு வந்தாலொழிய, நாமாக யாரையாவது கண்டுபிடிப்பது என்பது குதிரைக் கொம்புதான்.'' என கெரெக்ட் என்ற முன்னாள் சி.ஐ.ஏ அதிகாரி, தேடுதல் வேட்டையின் உண்மை நிலையைப் போட்டு உடைக்கிறார்.

பின்லேடனை 'ஏன் பிடிக்க முடியவில்லை' என்ற கேள்விக்கான விடையை ஆறாண்டுகளாக ஆராயும் அமெரிக்க ஊடகங்கள், மறந்தும், 'ஏன் பிடிக்க வேண்டும்' என்ற கேள்வியை ஆராய முற்படுவதில்லை. ஒசாமா பின் லேடன் உலகின் கொடிய பயங்கரவாதி எனும் கேள்விக்கிடமற்ற அமெரிக்க வாதம், சதாம் உசேன் வைத்திருந்த 'பேரழிவு ஆயுதங்கள்' என்ற முழுப் பொய்யின் யோக்கியதைக்கு நிகரானது.

ஆனால், அமெரிக்க அரசியல், இராணுவ நிபுணர்கள் நைச்சியமாக 'ஏன் பிடிக்க வேண்டும்' என்ற கேள்வியை எழுப்புகிறார்கள். பின்லேடனும், ஜவாஹிரியும் செயலற்றுப் போய் விட்டதாகவும், சர்வதேச தீவிரவாதம் அல்காய்தாவைத் தாண்டி, முன் பின் தெரியாத வடிவங்களில், சந்தேகிக்க இயலாத தனிநபர்களிடமிருந்து பிறப்பதாகவும், எனவே, பின் லேடனைக் கைது செய்வது, ஒரு குறியீடாக மட்டுமே இருக்கும் எனவும் வியாக்கியானம் செய்கிறார்கள். என்ன ஒரு விளக்கம்? பின்னர் எதற்காகவாம் இத்தனை காலத் தாக்குதல்களும், அடக்குமுறைகளும், அட்டூழியங்களும்?

ஆனால், இந்த வியாக்கியானத்தில் ஒரு அரை உண்மை பொதிந்திருக்கிறது. ஆம், இந்த 'பயங்கரவாத எதிர்ப்புப் போர்' தான் உண்மையில் 'பயங்கரவாதிகளை'ப் பெருக்குகிறது. ஆப்கானிஸ்தானிலும், பாலஸ்தீனத்திலும், செசன்யாவிலும், இராக்கிலும் அமெரிக்கப் படைகள் நடத்தும் அட்டூழியங்கள்தான் பின்லேடன்களையும், ஜவாஹிரிக்களையும் தொடர்ந்து உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

உண்மையில், பின்லேடன் பிடிபட்டாலும் சரி, பிடிபடாவிட்டாலும் சரி, இரண்டு நிலைகளுமே அமெரிக்காவின் உலக சாம்ராஜ்யக் கனவிற்கு வலுச்சேர்க்கவே செய்யும். ஏனெனில், எண்ணெய் யுத்தத்திற்கும், ஆசியக் கண்டத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும், தனது துருப்புச் சீட்டாக இசுலாமியப் பயங்கரவாதத்தைத்தான் அமெரிக்கா பயன்படுத்தி வருகிறது. தற்போதைய சூழலில், ஒசாமாவைப் பிடிப்பதைக் காட்டிலும், பிடிக்காமல் விடுவதே தனது ஏகாதிபத்தியக் கொள்ளை நலன்களுக்கு உகந்ததாக அமெரிக்கா கருதுகிறது.

இராக்கில் ஒரு தீராத இராணுவ நெருக்கடியில் சிக்கிக் கொண்டிருப்பதாலும், இசுலாமிய நாடுகளில் ஒசாமா ஒரு நாயகனாக வழிபடப்படுவதாலும், ஒசாமாவை உயிருடனோ, பிணமாகவோ பிடித்தால், அது மேலும் உக்கிரமான எதிர்த் தாக்குதல்களுக்கும், கடுமையான பொருளாதார, இராணுவ நெருக்கடிகளுக்கும் இட்டுச் செல்லும் என அமெரிக்கா அஞ்சுகிறது.

மேலும், ஒசாமா மற்றும் அல் காய்தா அபாயம் நீடிக்கும் வரைதான், போர்களையும், கொள்ளைகளையும் நீட்டிப்பதற்கான, அமெரிக்க வாக்காளர்களை ஏய்ப்பதற்கான குறைந்த பட்ச அரசியல் நியாயத்தையேனும் அமெரிக்கா தக்க வைத்துக் கொள்ள முடியும். எனவே, பயங்கரவாதப் போரை உண்மையில் முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமானால், உலகின் முதல் நிலை பயங்கரவாதியைத் தண்டித்தால்தான் அதனைச் சாதிக்க முடியும். அம்முதல் நிலை பயங்கரவாதி இந்துகுஷ் மலையில் அல்ல, புஷ் என்ற பெயரில் வெள்ளை மாளிகையில் வெளிப்படையாக உலவிக் கொண்டிருக்கிறான்.

• வாணன்



படிப்பகம்

www.padippakam.com

# இளமையின் கீதம்

## நூல் அறிமுகம்



சீனப் புரட்சியின் முக்கியமான கால கட்டத்தில், தங்களது தலைவிதியை தேசத்தின் தலைவிதியோடு இணைத்துக் கொண்டு போராடிய சீன இளைஞர்களின் கதை இது. 1931 முதல் 35 வரையிலான கொந்தளிப்பான இச்சூழலில்தான் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, வலது மற்றும் இடது திசை விலகல்களுக்கெதிராக தன்னைப் புனரமைக்க பெருமுயற்சி செய்து வந்தது. இந்தப் பிண்ணனியில், வர்க்கப் போராட்டம் எனும் உலைக் களத்தில் புடம் போடப்படுவதற்கு முன்வந்த சீன இளைஞர்களின் வரலாற்றுச் சித்திரமே இந்நாவல்.

1931 இல் சீனாவின் வடகிழக்கு மாநிலங்களை ஜப்பான் ஆக்கிரமித்தது. அப்போது சீனாவை ஆண்டு கொண்டிருந்த சியாங்கே ஷேக் எனும் பிற்போக்கு ஆட்சியாளன், ஜப்பானுடனான போரில் தோல்வியடைந்து பின்வாங்கினான். தேசத்தைச் சூழ்ந்திருந்த இவ்விரண்டு அபாயங்களையும் எதிர்த்து, தேசப்பற்றுமிக்க இளைஞர்கள் போராடினார்கள். இதன் முத்தாய்ப்பாக, கம்யூனிஸ்ட் கட்சி 1935 டிசம்பர் 16-இல் பீகிங் நகரத்தில் மாபெரும் அரசியல் எழுச்சி ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. இதற்கு இடைப்பட்ட காலத்தில் அரசியல் அரங்கிலும், கட்சியின் தளத்திலும், தனி மனிதர்களுக்குள்ளேயும் நடந்த போராட்டங்களின் உயிர்த்துடிப்பான பதிவே இந் நாவல். இப்போராட்டங்களினூடாக, மனித குலம் இதுவரை கண்டும், கேட்டும் இராத, உயர்ந்த, பண்பட்ட வார்ப்புகளாக பல கம்யூனிஸ்ட்டுகள் உருவானதன் இரத்தமும், தசையுமான வரலாறு இது.

கதையின் நாயகர்கள் எவரும், 'பிறவி நாயகர்கள்' அல்ல; காலத்தை எதிர்கொண்ட விதத்தினாலேயே நாயகர்களாக மாறியவர்கள்; புதிய ஜனநாயகப் புரட்சியின் ஒரு கண்ணியாக தங்களை நிலைநிறுத்தியதன் மூலம், நாயகர்களாக உயர்த்தப்பட்டவர்கள். கம்யூனிஸ்ட் கட்சிக்கு அறிமுகமாகும் நிலப்பிரபுத்துவ பின்னணி, சிறு முதலாளியப் பின்னணி, அறிவு ஜீவிகள், ஆலைத் தொழிலாளிகள், கூலி விவசாயிகள், சிறு உடைமையாளர்கள் போன்ற பல வர்க்கத்தினரும், பாட்டாளி வர்க்கமாக பட்டை தீட்டப் பட, சமூக நடைமுறை வேலைகளில் ஈடுபடுகின்றனர். அதில் அவர்களது தடுமாற்றம்; அதனைக் களைவதற்கான போராட்டம்; போராட்டத்தில் வெற்றி, தோல்வி; மீண்டும் போராடுவது ... என இவர்களது அரசியல் போராட்ட வாழ்க்கை நீள்கிறது; வழிதவறிப் போனவர்களும் இதில் உண்டு.

கார்க்கியின் 'தாய்' நாவல், ஒரு அரசியலற்ற தாயின் சமூக அக்கறையினூடாக, அவள் அரசியல்படுத்தப்படுவதை விளக்குகிறது. யாங்மோவின் 'இளமையின் கீதமோ', ஒரு பிற்போக்கு நிலவுடைமைச் சமூகத்தின், ஆசை நாயகி ஒருத்தியின் மகளான டாவோ-சிங்கின் எளிய தேசப்பற்று, அவளைக் கம்யூனிஸ்ட் கட்சி தோழராக மாற்றிய வரலாற்றுக் கட்டத்தையே விளக்குகிறது எனலாம்.



கட்டாயத் திருமணத்திலிருந்து தப்பித்து, கிராமப்புற பள்ளி ஆசிரியர் வேலைக்கு வருகிறாள் டாவோ-சிங். ஒரு நிலப்பிரபுவிற்கு ஆசை நாயகியாக அவளை மாற்றத் துடிக்கும் உறவினர்களை எதிர்த்துக் கொண்டு, அவளைக் காதலிக்கிறான் பல்கலைக் கழக மாணவனான யூ யூங்-சே. அவனுடன் நகரத்திற்கு வந்த பிறகு, ஒரு புத்தாண்டு விருந்தில் அவளுக்கு கம்யூனிச அறிமுகம் கிடைக்கிறது. லூ சியா-சுவான் என்ற தோழர் அவளுக்கு கம்யூனிசத்தைக் கற்றுக் கொடுக்கிறார்.

அதன் பிறகு கட்சிக்காக ஆசிரியராகிறாள்; கிராமங்களுக்கு செல்கிறாள்; உளவாளியாகச் செயல்படுகிறாள்; அடக்குமுறைக் காலங்களில் அஞ்சாமல் வேலை செய்கிறாள்; கைதாகி சிறைப்படுகிறாள்; இறுதியில் டிசம்பர் 16 ஆர்ப்பாட்டத்திற்கு மாணவர்களை அணிதிரட்டுகிறாள். ஒரு எளிமையான கிராமத்துப் பெண் படிப்படியாக போராளியாக மாற்றப்படுவதன் தருணங்களை நாவல் படம் பிடித்துக் காட்டுகிறது. கூடவே பல தோழர்களின் உயிர்த்துடிப்பான வாழ்க்கைகளையும் அறிகிறோம்.

கோமிண்டாங் போலீசிடம் பிடிபட்ட லூ சியா-சுவான், தன் மீதான சித்திரவதைகளைப் பொறுத்துக் கொண்டு, பிற தோழர்களுக்கு ஆபத்து எனத் தெரிந்தவுடன் துடித்துப் போய், கட்சிக்கு தகவல் அனுப்ப முயல்கிறார். அவர் மடிந்தாலும், தோழர்கள் காப்பாற்றப்படுகிறார்கள். வீ-வெய் என்ற தோழர், உற்சாகத்துடன் விளையாடச் செல்லும் விளையாட்டு வீரனைப் போல மற்றவர்களிடம் வெற்றி பெற வாழ்த்து தெரிவித்து, கைகுலுக்கி விட்டு, தூக்குமேடைக்குச் செல்கிறார்.

புரட்சிகர இயக்கமோ கம்யூனிசமோ, பலருக்கு இது போன்ற பரவச மூட்டும் தருணங்க

www.padippakam.com

ளில்தான் அறிமுகமாகிறது. இந்நிகழ்ச்சிகளையும், மனிதர்களையும் நம்பமுடியாத ஆச்சரியத்துடன் பார்க்கின்றனர் சிலர். பலருக்கு இத்தியாகம், நம்பிக்கையூட்டி கிளர்ச்சியூட்டுகிறது. வாசகர்களுக்கு இந்த எழுச்சி உணர்வு தொடர்ந்து இருக்க வேண்டுமானால், அவர்கள் தம்மை கதாபாத்திரமாக மாற்ற வேண்டியுள்ளது. அதாவது புரட்சிகர நடைமுறையில் இறங்க வேண்டியுள்ளது.

புதிய ஜனநாயகப் புரட்சிதான் தீர்வு என்பதை ஏற்றுக் கொண்டாலும், இன்றைய சமூக அமைப்பு அளிக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி தான் மட்டும் தப்பித்துக் கொள்ளலாம், எனக் கருதுபவர்கள் இன்று மட்டுமல்ல, அன்றைய சீனத்திலும் இருந்தார்கள். நடுத்தர வர்க்கத்தின் இத்தகைய சிந்தனைக்கு நாவலில் வகை மாதிரியாக வருபவன் சூ-நிங். இந்த அநீதியான பறிக்கப்பட்ட வாய்ப்புக்களை உதறிவிட்டு கம்யூனிஸ்ட்டாக மாறுபவர்களுக்கு எடுத்துக்காட்டாக அவனது நண்பனான லோ டா-ஃபாங்கைக் கூறலாம்.

தாயின் பாசம், காதல், படிப்பு ஆகியவற்றுக்காக செஞ்சேனைக்கு செல்லும் தனது முடிவிலிருந்து பின் வாங்குகிறார் சூ-நிங். அவனது நண்பனும், கட்சித் தோழனுமான லோ டா-ஃபாங், ஒரு நிலப்பிரபுவின் மகன்; அவனது தந்தை நான்கிங் நகரத்தில் அரச பதவிக்கு வர இருக்கிறார்; இந்நிலையில் கட்சி ஒரு ஆர்ப்பாட்டத்திற்கு அறைகூவல் விடுக்கிறது. மற்றவர்களை அணிதிரட்டும் சூ-நிங், தான் மட்டும் கலந்து கொள்ளாமல் நழுவுகிறான். தலைமறைவாக இருக்க வேண்டிய லோ டா-ஃபாங் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு பெண் தோழர்களைக் காப்பதற்காகக் களத்தில் இறங்கிச் சண்டையிடுகிறான். பின்பு,வட கிழக்குப் போர்முனைக்கும் விரைகிறான். இருவரும் நண்பர்கள்தான் என்றாலும், நடைமுறையில் தோழர்களாக செயல்படுவதில் வேறுபடுகிறார்கள்.

நடைமுறை வேலைகளில் தோய்த்துப் பார்க்காத எவரும் எவ்வளவுதான் மார்க்சிய லெனினியத்தைக் கற்றுத் தேர்ந்தாலும் அற்பக் காரணங்களுக்காக கட்சியை விட்டு விலகத்தான் நேரிடும். அவர்கள் கோடிக்கணக்கான மக்களின் விடுதலையைத் தீர்மானிக்க உதவும் சித்தாந்தத்தை, தமது சுயநலனுக்காக கைவிடுவார்கள். அவர்கள் தலைவர்களாக அமையும் போது, தமது தவறையே ஒரு சித்தாந்தமாக நியாயப்படுத்துகின்றனர். மேல் கமிட்டி தோழராக வரும் தய் யூ அன்றைய சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் சாகசவாதத்தை முன்வைத்த லிலிசான் பிரிவைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர். ஆரம்பத்தில் சாகசவாதத்தை கிளர்ச்சியூட்டும் முறையில் பேசுபவர், இறுதியில் எதிரியின் உபசரிப்பில் மயங்கி கட்சிக்குத் துரோகமிழைக்கிறார். ஒரே மூச்சில் புரட்சி, இல்லையேல் வீழ்ச்சி என்று இரு கடைக் கோடிகளுக்கும் செல்லும் இவர்களைத்தான், இடது சந்தர்ப்பவாதிகள் என்று லெனின் அழைக்கிறார்.

> ***''கடந்த ஆண்டுகளில் கொடுஞ்சிறையில் இருந்த போது உலகின் மிக முன்னேறிய வர்க்கத்தின் போராளியாக நீ மாறிவிடுவாய் என்று நான் முன்னோக்கிப் பார்த்தேன். புரட்சியை முன்னெடுத்துச் செல்பவர்களில் ஒருவராகவும் இருப்பாய் தோழரே. வெற்றியின் நேரத்தை விரைவுபடுத்துவதற்காக, ஒவ்வொரு நாளும் கம்யூனிஸ்டுகள் இரத்தம் சிந்துகிறார்கள்; உயிர்த்தியாகம் செய்கிறார்கள்.***

முப்பதுகளில் சில மாதங்களே தலைமையில் இருந்த லிலிசான் சாகசப் பிரிவைப் பரிசீலித்து, விமர்சிக்கத் தவறியதால், கோமிண்டாங் அரசு கட்டவிழ்த்து விட்ட வெள்ளைப் பயங்கரவாதத்திற்கு கட்சி ஆட்பட நேர்ந்தது. இதனால் 'நெடும் பயணம்' என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க போராட்ட இடப்பெயர்வின் மூலம், கட்சி தனது மிச்சமிருக்கும் உறுப்பினர்களைக் காப்பாற்றியது. நெடும் பயணத்தின் மத்தியில் 1935 ஜனவரியில் நடந்த சுன்யீ மாநாட்டில் கட்சி தனது தவறான பாதை குறித்து சுயவிமரிசனம் செய்து கொண்டது. பல இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட கட்சியே தன்னை சுயவிமரிசனம் செய்து கொள்ளும் போது, தனிப்பட்ட அறிவாளிகளோ தன்னை முன்னிறுத்தி தவறுகளை சுயவிமரிசனம் செய்ய மறுக்கின்றனர். முன்னாள் தோழரும் நடிகையாக மாறியவருமான பய் லீ-பிங் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

''கம்யூனிசம்கிறது கெட்ட விஷயமில்ல; தத்துவ ரீதியா அது ரொம்ப தெளிவில்லாதது; வெற்றியோ ரொம்ப தூரத்தில் இருக்குது... அது தவிர நீ கைது செய்யப்படலாம்; உன்னோட தலை துண்டிக்கப்படலாம்கிற அபாயத்துல எப்பவும் இருக்க! இதிலிருந்து தப்பிக்க ஒனக்கு ஓரளவு அதிர்ஷ்டம் இருந்தாலும், கடுமையான ஒழுக்கத்தோட இருக்கணும்; நிபந்தனையில்லாம தலைமைக்குக் கட்டுப்படணும்; அதனாலதான் நான் அதிலிருந்தெல்லாம் வெளியேறிட்டேன்'' என டாவோ-சிங்கிடம் 'அறிவுரை' கூறுவாள் பய் லீ-பிங். காரியவாதம், பிழைப்புவாதம், சந்தர்ப்பவாதம் என்று பல்வேறு பெயர்களில் இருக்கும் தனது சொந்த வாழ்க்கை சுயநலங்களைப் புனிதப்படுத்துவதற்கு, முன்னாள் கம்யூனிஸ்ட்டுகள் வைக்கும் இவ்வுலகளாவிய வாதத்தை தமிழகத்தின் பல அறிவு ஜீவிகளிடமும் காண்கிறோம். சுயநலத்திற்கு தேசப் பிரிவினை ஏது?

பய் லீ-பிங் மீதான காதல்தான் சூ-நிங்கை செஞ்சேனைக்கு செல்வதிலிருந்து விலக வைத்தது. அன்று மாலையே கோமிண்டாங் இராணுவம் அவனைக் கைது செய்துவிடும். சிறை வாழ்வும், அங்கு கண்டறிந்த தோழர்களின் அர்ப்பணிப்பும், தியாக உணர்வும் அவனைத் தோழராகப் பட்டை தீட்டுகிறது. சுயநலம் மிகுந்த பய் லீ-பிங்கின் அழகை விட, அனைவருக்கும் விடுதலையைத் தரப்போகும் கம்யூனிசத்தின் அழகு, அவனை செஞ்சேனையில் கொண்டு சேர்ப்பதற்குக் காரணமாக அமைகிறது.

நிலப்பிரபுக்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றும் யூ யூங்-சே-வை முதலில் காதலிக்கிறாள் டாவோ-சிங். இந்த முதல் செயலுக்கு மேல், அவனது முற்போக்கு முடிந்து விடுகிறது. கட்சியில் சேர்ந்து தோழராக வேலை செய்யும் டாவோ-சிங்கை முதலில் நாசூக்காகவும், பின்பு நேரடியாகவும் கண்டிக்கிறான் யூ யூங்-சே. இதற்கு மேல் இங்கு காதலுக்கு இடமில்லை என்பதால், அவனை விட்டு விலகுகிறாள் டாவோ-சிங். இதே போல தய்-யூ ஒரு துரோகி எனத் தெரிந்தவுடன் அவனுடனான காதலைத் துறக்


படிப்பகம்

www.padippakam.com

கிறாள் டாவோ-சிங்கின் தோழியான சியாவோ-யென்.

இப்படித்தான் கம்யூனிஸ்டுகளின் காதலில் சமூக உணர்வு மட்டுமே அளவு கோலாகிறது. வேறெந்த சித்தாந்தங்களை வைத்திருப்பவர்கள் எவரும், இப்படிக் குடும்ப வாழ்வில் முரண்படுவதில்லை. தோழர்கள் மட்டும்தான், தனது சமூக விழுமியங்களை குடும்பத்திலும் கொண்டு வரப் போராடுகிறார்கள். அதனால் கம்யூனிஸ்டுகளுக்கு மட்டும் 'மகிழ்ச்சியான' குடும்ப வாழ்க்கை அமைவதில்லை. ஆனால் ஊரையும் வீட்டையும் திருத்தும் இத்தகைய போராட்டங்களில்தான், அவர்களது உண்மையான மகிழ்ச்சி வெளிப்படுகிறது.

தனது மனைவி டாவோ-சிங் தோழராக மாறியதால், தனது குடும்பத்தின் இன்பம் மறைந்து விட்டதாக யூ யூங்-சே, தனது நண்பனான லூ சியா-சுவான் எனும் கட்சித் தோழருக்கு எழுதிய கடிதத்தின் வரிகள் இவை: ''சில கொள்கைகளைப் பிரச்சாரம் செய்ததன் மூலம் என் மனைவியின் மனதை நீ ரொம்பவும் கெடுத்து விட்டிருப்பதை நான் காண்கிறேன். அவள் உனது ஆணைப்படியே செயல்படுகிறாள். எப்போது பார்த்தாலும் ''புரட்சி'', ''போராட்டம்'' என்றுதான் பேசிக் கொண்டிருக்கிறாள். மிக மோசமான முறையில் எங்கள் குடும்ப மகிழ்ச்சி மறைந்து விட்டது. நீ உன் விருப்பம் போல் நடந்து கொள்ளலாம் என்றாலும் எனது துன்பத்தில் நீ இன்பம் காண்பதும், எனது அவலத்தில் நீ உனது வாய்ப்பை வளர்த்துக் கொள்வதும் எவ்வளவு வருந்தத்தக்கது.... ஒவ்வொருவருக்கும் ஒரு நீதிநெறி இருக்க வேண்டும்....''.

யூ யூங்-சேயைப் பிரிந்து தோழராக வேலை செய்யும் டாவோ - சிங்கிற்கு லூ சியா-சுவானின் தோழமையுடன் கூடிய ஆளுமை, ஒரு மெல்லிய காதலைத் தோற்றுவிக்கிறது. மரணத்திற்கு முந்தைய சிறைக் கொட்டடியில் இருக்கும் லூ சியா-சுவான், டாவோ-சிங்கிற்கு கடிதம் எழுதுகிறார். ''கடந்த ஆண்டுகளில் கொடுஞ் சிறையில் இருந்த போது உலகின் மிக முன்னேறிய வர்க்கத்தின் போராளியாக நீ மாறிவிடுவாய் என்று நான் முன்னோக்கிப் பார்த்தேன். புரட்சியை முன்னெடுத்துச் செல்பவர்களில் ஒருவராகவும் இருப்பாய் தோழரே. வெற்றியின் நேரத்தை விரைவுபடுத்துவதற்காக, ஒவ்வொரு நாளும் கம்யூனிஸ்



டுகள் இரத்தம் சிந்துகிறார்கள்; உயிர்த் தியாகம் செய்கிறார்கள். .... அன்புத் தோழரே, அன்பு டாவோ-சிங், எனது முறை விரைவிலே வரக்கூடும்...''

இரண்டு கடிதங்களுக்குமிடையில்தான் வாழ்க்கை குறித்த கண்ணோட்டத்தில் எவ்வளவு வேறுபாடுகள்! தேசத்தின் விடுதலைக்கான முயற்சியால் குடும்ப வாழ்க்கையின் மகிழ்ச்சி மறைந்து விட்டது என்று புலம்புகிறது ஒரு கடிதம். இன்னொரு கடிதமோ தான் கொல்லப்பட்டாலும் தன் காதலி போராட்டத்தை தொடர்ந்து செய்யவேண்டும் என்று கம்பீரமாக விரும்புகிறது. மக்களது விடுதலை என்ற எதிர்காலக் கனவுக்காக, நிகழ்காலத்தின் துயரங்களை புன்சிரிப்புடன் ஏற்றுக்கொள்ளும் கம்யூனிஸ்ட்டுகள், மனித வாழ்க்கையின் முழுமையைத் தங்களது வாழ்க்கையில் அடைகிறார்கள்.

''இருளைவிட ஒளி வலிமையானது; அற்ப குணத்தை விட பெருந்தன்மை வலுவானது; சுயநலத்தை பொதுநலமும், துயரத்தை மகிழ்ச்சியும் வெற்றி கொள்ள வேண்டும். உண்மையான மனிதனாக நாம் வாழ வேண்டும். இதையே நான் எனது எழுத்தில் வெளிப்படுத்த முயற்சி செய்திருக்கிறேன்'', எனத் தனது முன்னுரையில் குறிப்பிடுகிறார் நாவலாசிரியர் யாங் மோ. ஆம், முற்போக்கு, மக்கள் நலன், சமூக அக்கறை, மாற்றம், புரட்சி எனப் பேசுபவர்களைத் தொட்டுத் துரத்தும் முதற்புள்ளி இதுதான். அதுதான் இந்நாவலின் எளிய மாந்தர்களைக்கூட மாபெரும் நிகழ்வுகளைச் சாதிக்கும் போராளிகளாக மாற்றியிருக்கிறது.

தனிநபர்களின் வழியாகவோ அல்லது எந்திரகதியிலான விவரங்கள் அடிப்படையிலோ வரலாற்றை படிக்கப் பழக்கப்பட்டிருக்கிறோம். நாவலோ ஒரு உயிர்த்துடிப்பான வரலாற்றுப் பின்னணியில், பல்வேறு வர்க்கப் பின்னணியிலிருந்தும் வரும் மனிதர்களை வைத்து, மனித வாழ்க்கையின் மாறத்துடிக்கும் போராட்டத்தின் காட்சியை ஒரு மாபெரும் ஓவியமாக தீட்டுகிறது.

இந்த ஓவியத்தில் மூழ்கி எழும்போது நாவலின் பாத்திரங்கள் கடந்த காலத்திற்கு மாத்திரம் உரியவர்கள் அல்ல, நிகழ் காலத்தில் நம்மிடையேயும், நமக்குள்ளேயும் அவ்வப்போது எட்டிப் பார்ப்பது தெரிய வருகிறது. 748 பக்கங்களில் விரியும் நாவலைப் படித்து முடித்ததும், நாமும் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து வேலை செய்ய மாட்டோமா என்ற ஆவலும் புதிய வாசகருக்கு நிச்சயம் எழும். தோழர்களுக்கோ புரட்சியின் உரைகல்லில் நாம் எங்கு, யாராக, என்னவாக நிற்கிறோம் என்ற நிலைக் கண்ணாடி போல நாவல் காட்டிவிடும்.

'புரட்சி சரியானது; மக்களை அணி திரட்டவேண்டும்; நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றை ஒழிக்கப் போராட வேண்டும். ஆனால், எனது பிரச்சினை தனியானது. நான் மட்டும் பிழைத்துக் கொள்வேன்; எனது மகிழ்ச்சி இப்போதே கிடைக்கும்; மக்களுக்கோ புரட்சிக்குப் பிறகுதான்' எனக் கருதுவதற்கான வாய்ப்பை அன்றைய சீனத்திலும், இன்றைய இந்தியாவிலும் ரத்து செய்கிறது நாவல்.

●வசந்தன்

**சீன நாவல் : இளமையின் கீதம்**
**ஆசிரியர் : யாங் மோ**
**தமிழில் : மயிலை பாலு**
**பக்கங்கள் : 748**
**விலை : ரூ.300**

வெளியீடு:
**அலைகள் வெளியீட்டகம்,**
25, தெற்குச் சிவன் கோயில் தெரு, கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 044-24815474

கிடைக்குமிடம்:
**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை,
சென்னை - 600 002.
தொலைபேசி: 044-28412367

www.padippakam.com



மண்டபத்தை மதுபான விடுதியாகவும், கோயில் திருக்குளத்தை பிணம் மறைக்கும் கொலைக்கள மாகவும், ராஜ கோபுரத்தை காமக்களியாட்ட மன்றமா கவும் மாற்றிவிட்டு, மயி ரளவும் அச்சமின்றி மதர்ப் புடன் திரிந்து வந்த தீட்சி தர்கள்,

பிரதமர்கள், முதல் வர்கள் முதல் நீதிபதிகள் வரை அனைவரையும் இன் றளவும் தம் சிண்டின் நுனியிலே முடிந்து வைத்தி ருக்கும் தீட்சிதர்கள், கொலை - கொள்ளை முதலான எந்தக் குற்றங்க ளுக்காகவும் இதுவரை விசாரணைக்குக் கூட உட் படுத்தப்படாத தீட்சிதர்கள் - இன்று கடலூர் சிறையில் களி தின்று கொண்டிருக்கிறார்கள்.



தில்லை நடராசர் கோவில்: தமிழின் மீது துவேசமும், தமிழ் மக்களின் மீது தீண்டாமைக் கொடுமையையும் காத்து வந்த அவலமான வரலாற்றுச் சின்னம்.

எந்தச் சிற்றம்பல மேடையில் தமிழ் ஒலிக்க விடாமல் தீட்சிதர்கள் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தார்களோ அதே மேடையில், அவர்களால் அடித்து வீழ்த்தப்பட்ட அதே ஆறுமுகசாமி பாடினார். எந்த ஆறுமுகசாமியை 8 ஆண்டுகளுக்கு முன் கேட்பாரின்றி அடித்துக் கையை உடைத்துத் தூக்கி வீசினார்களோ, அதே ஆறுமுகசாமி யானை மீதேறி சிற்றம்பல மேடையில் வந்து இறங்கினார். தீட்சிதர்களோ, அதே இடத்தில் தூக்கி வீசப்பட் டார்கள்.

இது இறுதி வெற்றி இல்லை, முதல் அடி மட்டுமே என்பதென்னவோ உண் மைதான். ஆனால் முதல் அடி என் றாலும் அவர்கள் முகத்தில் விழுந்த அடி. முன் எப்போதும் விழுந்திராத அடி. ஆனானப்பட்ட மாமன்னன் இரா ஜராஜனையே ஆட்டிப்படைத்த தீட்சி தர்கள், ஆறுமுகசாமி எனும் ஏதுமில்லாப் பரதேசியால் அடித்து வீழ்த்தப்பட்டிருக்கிறார்களே, எப்படி? இது ஆண்டவனின் அனுக்கிரகமல்ல என்பது அனைவருக்கும் தெரியும். எனில் இது என்ன அரசாங்கத்தின் அனுக்கிரகமா? அரசாங்க முட்டை தான் அம்மியை உடைத்திருக்கிறதா? அப்படித்தான் கூறுகின்றன இதுவரை ஊடகங்களில் வந்துள்ள செய்திகள்.

சிற்றம்பல மேடையில் தமிழ் பாடலாம் என்று திமுக அரசு ஆணை யிட்டதாம். தடுத்து நின்ற தீட்சிதர் களைத் தூக்கி வீசிவிட்டு அர சாணையை அமல்படுத்திவிட்டதாம் போலீசு. "தீட்சிதர்கள் போலீசு கைக லப்பு" பிறகு "ஆறுமுக சாமியின் ஆதர வாளர்கள்-போலீசு கைகலப்பு" "தீட்சி தர்கள் 11 பேர், ஆறுமுகசாமி மற்றும் அவரது ஆதரவாளர்கள் 35 பேர் - ஆக மொத்தம் 46 பேருக்கு சிறை!" இறு தியில் போலீசு வென்றது. சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டது! - இது தான் தில்லைப் போராட்டம் பற்றி ஊட கங்கள் அளித்துள்ள சித்திரம்.

நிலைநாட்டப்பட்டது தமிழ் உரிமையா, சட்டமா? வென்றது போலீசா அல்லது ஆறுமுக சாமிக்குத் துணை நின்ற மனித உரிமைப் பாது காப்பு மையம், மக்கள் கலை இலக் கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி ஆகிய அமைப்பு களைச் சேர்ந்த தோழர்களா? இவைதான் நம் முன் உள்ள கேள்விகள்.

இவற்றுக்கு விடை கூற வேண்டுமெனில் கடந்த பல ஆண்டுகளாக மேற் கூறிய எமது அமைப்புகள் தில்லையில் நடத்திவரும் போராட்டத்தைப் பற்றி இங்கே விளக்கமாகக் கூற வேண்டும். ஏனென்றால் எமது அமைப்புகளின் பெயர்களை மறைத்து யாரோ அடையாளம் தெரியாத சில ஆதரவாளர் கள்தான் ஆறுமுகசாமிக்குத் துணை நின்றதைப் போன்ற தோற்றத்தை ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் ஏற் படுத்தியுள்ளன. எனினும் எமது போராட்டத்தின் வர லாற்றை விவரிப்பதற்கு இது இடமன்று. மார்ச் 2 அன்று நடை பெற்ற சம்பவங்களை ஆராய்வதன் மூலமாகவே இந்தக் கேள்விகளுக்கு விடை கண்டுவிட முடியும்.

நீண்ட நெடிய போராட்டம் நடத்தி அதன் இறுதியில் அரசாங்கத்தின் வாயி லிருந்து நாங்கள் வரவழைத்ததுதான் இந்த அரசாணை. மார்ச் 1-ஆம் தேதி அரசாணையின் நகல் கையில் கிடைத்த வுடனே "மார்ச் 2-ஆம் தேதி ஆறு முகசாமி பாடுவார்" என்று அறி வித்தோம். சுமார் 300 தோழர்கள் திரண்டு வந்திருந்தனர். ஆனால், வெறும் 30 பேரை மட்டுமே கோயி லுக்குள் அனுமதித்து மற்றவர்களைத் தடுத்து நிறுத்தியது போலீசு. சுற்றுவட் டாரத்து மக்களும் பிற அமைப்பினரும் பல நூறு பேர் திரண்டு வர விரும்பினர். ஆனால் அவர்களை அச்சுறுத்தி அப்பு றப்படுத்தும் வண்ணம் நகரத்தையே வெள்ளை வாகனங்களால் போலீசு நிரப்பியது.

கோயிலுக்குள்ளே நூற்றுக்க ணக்கான போலீசார், வெறும் 30 தோழர்கள்! இந்த ஏற்பாடுகள் எல்லாம் யாரைப் பாதுகாக்க? தமிழுக்குப் போராடச் சென்ற தோழர்களைப் பாது காக்கவா, அல்லது தமிழ்

**அவர் மனம் உருகிப் பாடவில்லை, பாடியிருக்கவும் முடியாது என்பதை தொலைக்காட்சியில் அந்த நிகழ்வைப் பார்த்த அறிவிலிகளும் கூடப் புரிந்து கொண்டிருக்க முடியும். அவர் மனம் குமுறிக் குரல் கொடுத்தார் என்பதுதான் உண்மை. அங்கே நடந்தது 'வழிபாடு' அல்ல, போராட்டம்!**




படிப்பகம்

www.padippakam.com

விரோதிகளான தீட்சிதர்களைப் பாதுகாக்கவா?

சூழ்ச்சிகரமான இந்த போலீசு நடவடிக்கைகளின் விளைவாகத்தான் செஞ்சட்டைகளால் சூழப்பட்டிருக்க வேண்டிய சிற்றம்பல மேடை, காக்கிச்சட்டைகளால் நிரம்பியிருந்தது. பார்ப்பன எதிர்ப்பாளர்களுக்கும் தீட்சிதப் பார்ப்பனர்களுக்கும் நடந்திருக்க வேண்டிய போராட்டம், போலீசுக்கும் தீட்சிதர்களுக்குமான கைகலப்பாக மாற்றப்பட்டது. 'பார்ப்பானையும் பாதுகாப்பது, தமிழையும் பாதுகாப்பது' என்ற கேலிக்குரிய கொள்கையின் கோமாளித்தனமான காட்சி வடிவம்தான் அன்று சிற்றம்பல மேடையிலிருந்து உலகத்துக்கே ஒளிபரப்பப்பட்டது.



சிவனடியார் ஆறுமுகசாமி.
தள்ளாத வயதிலும் தமிழுக்காகப் போராடும் போராளி!

காக்கிச் சட்டைகளின் இடத்தில் செஞ்சட்டைகள் சூழ்ந்து நிற்கும் காட்சியை மனக்கண்ணில் கொண்டு வந்து பாருங்கள்! அது மட்டும் நிகழ்ந்திருந்தால் வேறு சில அதிசயங்களும் நிகழ்ந்திருக்கும். ஆறுமுகசாமி வெறும் அரை நிமிடம் பாடியிருக்க மாட்டார். அந்தத் தில்லைக் கூத்தனே தன் ஆட்டத்தை நிறுத்தி விட்டு, ஆறுமுகசாமியின் முன் பிரசன்னமாகி, 'போதும் பக்தனே போதும்' என்று கதறும் வரையில் ஆறுமுகசாமியைப் நாங்கள் பாடவைத்திருப்போம். சிற்றம்பல மேடையில் கொஞ்சம் இரத்தமும் சிந்தியிருக்கக் கூடும். அதனாலென்ன, நூற்றாண்டுகளாய் அங்கே சிந்திய இரத்தத்தின் கறையைக் கழுவுவதற்கு அது பயன்பட்டிருக்கும்.

சிற்றம்பல மேடையில் தீட்சிதர்களுடன் போலீசு மல்லுக்கட்டுவதைப் போன்ற காட்சி ஒளிபரப்பானதே, அந்தக் காட்சிதான் 'கண்ணால் காண்பது பொய்' என்ற முதுமொழிக்கு மிகப்பெரும் சான்று. தீட்சிதர்களிடமிருந்து தமிழைப் பாதுகாப்பதற்கு அல்ல, எமது தோழர்களிடமிருந்து தீட்சிதர்களைப் பாதுகாப்பதற்குத்தான் ஆயிரக்கணக்கில் அங்கே போலீசு குவிக்கப்பட்டிருந்தது.

●●●

இதை நம்ப மறுப்பவர்கள் யாரேனும் இருந்தால் அவர்களுக்காகவே இரண்டாவது காட்சி தில்லைக் கோயிலின் வாசலில் அன்று மாலையே அரங்கேறியது. "சிற்றம்பல மேடையில் 2 வரிகள் கூடத் தேவாரம் பாட இயலவில்லை. எனவே, அரசு ஆணையின்படி சிற்றம்பல மேடையில் அமைதியாக தேவாரம் பாடி வழிபட காவல் துறை வழி செய்யவேண்டும். தாக்குதலில் ஈடுபட்ட தீட்சிதர்கள் 30 பேர் மீது கொலைமுயற்சி மற்றும் தீண்டாமைக் குற்ற வழக்குகள் பதிவு செய்ய வேண்டும்" என்று கோரினார் ஆறுமுகசாமி. அவரது தலைமையில் எமது தோழர்கள் தெற்கு வாயிலின் முன் மறியல் நடத்தினர்.

"நீங்கள் கலைந்து செல்லாத வரை தீட்சிதர்கள் மீது நீங்கள் கொடுத்துள்ள புகாரை வாங்க முடியாது" என்றனர் போலீசு அதிகாரிகள். "ஆறுமுகசாமி பாடுவதற்கு உத்திரவாதம் அளித்தால் கலைந்து செல்கிறோம்" என்று மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜு கூறினார். ஆனால் "அதற்கெல்லாம் எந்த உத்திரவாதமும் தரமுடியாது, கலைந்து செல்லுங்கள்" என்றார் ஆர்.டி.ஓ. "மீண்டும் பாட அனுமதிக்கும் வரையில் அமைதியாக ஆலயத்தின் வாயிலிலேயே அமர்ந்திருப்போம் கலைந்து செல்ல முடியாது" என்று ஆறுமுகசாமியும் அனைத்து தோழர்களும் ஒரே குரலில் கூறினர்.

உடனே, பின்புறத்திலிருந்து மர்மமான முறையில் ஒரு கல் வந்து விழுந்தது. இதற்காகவே காத்திருந்தவர்கள் போல அடுத்த கணமே கூட்டத்தினர் மீது போலீசார் தடியடித் தாக்குதல் நடத்தத் தொடங்கிவிட்டனர். சிவப்புச் சட்டை அணிந்த எங்களது தோழர்கள் குறி வைத்துத் தாக்கப்பட்டனர். மண்டை உடைந்து ரத்தம் கொட்டிய நிலையில் சிதறி கலைந்தவர்களையும் தெருத்தெருவாக விரட்டி விரட்டித் தாக்கியது போலீசு. இது தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படாத காட்சி. இதற்கு சிதம்பரம் நகர மக்கள்தான் சாட்சி.

சிற்றம்பல மேடையில் மாவட்ட போலீசு கண்காணிப்பாளரைப் பிடித்துத் தள்ளுகிறான் ஒரு தீட்சிதன். பத்திரிகைகளில் புகைப்படங்களே வெளிவந்திருக்கின்றன. "போலீசு அதிகாரிகளை தீட்சிதர்கள் தண்ணீர் பாக்கெட்டால் அடித்தார்கள், கடித்துக் குதறினார்கள், தாக்கினார்கள்" என்று கண்ணால் கண்ட பத்திரிகையாளர்கள் எழுதியிருக்கிறார்கள். இருந்தாலும் சாந்த சொரூபிகளாக, சட்டையைக் கழற்றிவிட்டு நோகாமல் அனைத்து தீட்சிதர்களை வெளியேற்றுகிறார்கள் போலீசுக்காரர்கள்.

**'சமஸ்கிருதத்துக்கு ஒரு நீதி தமிழுக்கு ஒரு நீதி' என்பதைக் களைவதற்காகப் போடப்பட்ட ஒரு அரசாணை! அதனை அமல்படுத்தக் கோரினால் 'சூத்திரனுக்கு ஒரு நீதி, பார்ப்பானுக்கு ஒரு நீதி' என்ற அதைவிடப் பெரிய அரசாணை அமலாகிறது! "தமிழ் பாடலாம்" என்று ஆணையிடுகிறது அரசு. "அதை அமல்படுத்த உத்திரவாதம் தர முடியாது" என்று அந்தக் கோயிலின் வாசலிலேயே நின்று பிரகடனம் செய்கிறார் ஆர்.டி.ஓ.**


படிப்பகம்

www.padippakam.com

அதே போலீசு அன்று மாலை தோழர்கள் மீது தடியடி நடத்தும் காட்சியும் தொலைக்காட்சிகளில் சிறிதளவு ஒளிபரப்பானது. ஒரு தோழரை 4 போலீசார் சுற்றிக் கொண்டு மண்டையில் அடிக்கின்றனர். வயிற்றில் லத்தியால் குத்தி அவரைக் கூழாக்குகின்றனர். இது மாலையில் போலீசின் நடத்தை!

'சமஸ்கிருதத்துக்கு ஒரு நீதி தமிழுக்கு ஒரு நீதி' என்பதைக் களைவதற்காகப் போடப்பட்ட ஒரு அரசாணை! அதனை அமல்படுத்தக் கோரினால் 'சூத்திரனுக்கு ஒரு நீதி, பார்ப்பானுக்கு ஒரு நீதி' என்ற அதைவிடப் பெரிய அரசாணை அமலாகிறது! ''தமிழ் பாடலாம்'' என்று ஆணையிடுகிறது அரசு. ''அதை அமல்படுத்த உத்திரவாதம் தர முடியாது'' என்று அந்தக் கோயிலின் வாசலிலேயே நின்று பிரகடனம் செய்கிறார் ஆர்.டி.ஓ. ''அமல்படுத்து'' என்று கேட்ட எமது தோழர்கள் போலீசு வேனுக்குள் இரவு முழுவதும் வைத்துப் பூட்டப்படுகிறார்கள்.

மார்ச் 2-ஆம் தேதி காலையில் யானை மீது ஏறி தில்லை நகர வீதிகளில் நாயகனாகப் பவனி வந்த ஆறுமுகசாமி அன்று மாலையே 'அவருக்கு உரிய' இடத்துக்கு தள்ளப்பட்டு விடுகிறார். ''எனக்காகப் போராடிய பிள்ளைகளை அடித்துக் கைது செய்தாயே, என்னையும் கைது செய்!'' என்று தன்னந்தனியனாக போலீசு நிலையத்தின் முன் மறியல் செய்கிறார். காலையில் சிற்றம்பல மேடையில் போராட்டம்! மாலையில் போலீசு நிலையத்தின் முன் போராட்டம்!

பார்ப்பனத் திமிரையோ, போலீசின் அராஜகத்தையோ, இந்த அரசின் இரட்டை வேடத்தையோ அம்பலப் படுத்துவதற்காக மட்டும் இவற்றையெல்லாம் விவரிக்கவில்லை.



தமிழை வெறி கொண்டு எதிர்க்கும் தீட்சிதர்களின் பார்ப்பனக் கொழுப்பு!

இதுவரை விவரிக்கப்படாத ஒரு கொடுமையை, பலர் ஒப்புக்கொள்ள மறுக்கும் ஒரு எதார்த்தத்தை, நந்தனின் உள்ளத்தை எரித்திருக்கக் கூடிய அந்த உண்மையை வாசகர்கள் உணரச் செய்வதற்காகத்தான் இவற்றை விவரித்தோம்.

•••

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் நுழையக்கூடாத கோயிலுக்குள் நுழையக் கனவு கண்ட நந்தனை 'கிறுக்கன்' என்று அவனுடைய சொந்த சாதிக்காரர்களே ஏளனம் செய்திருக்கக் கூடும். 'திமிர் பிடித்த மூடன்' என்று பார்ப்பன உயர்சாதி ஆண்டைகள் வெறுத்திருக்கக் கூடும். கேட்பாரில்லாத அநாதையாய் அவன் அந்த ஆலயத்தின் வாயிலில் எரிந்திருக்கக் கூடும்.

நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. காலம் மாறிவிட்டது. அரசும் ஆணையிட்டு விட்டது. ஆனால் மார்ச் 2-ஆம் தேதி மாலை தில்லைக் கோயிலின் தெற்கு வாயிலில், எமது தோழர்கள் ரத்தம் சொட்டச் சொட்டத் தாக்கிக் கைது செய்யப்பட்ட பிறகு, அந்த நந்தனைப் போலவே, கேட்பாரற்ற அநாதையாக, நந்தன் எரிந்த அதே வாயிலில் ஆறுமுகசாமியும் அமர்ந்திருந்தார். 'என்னை எரித்துக் கொல்' என்று நந்தன் பார்ப்பனர்களிடம் மன்றாடவில்லை. ஆறுமுகசாமியோ, 'என்னை கைது செய்' என்று போலீசிடம் போராடினார். நீதிமன்றத்தில் மன்றாடினார். ஏனென்றால் நாங்கள் அகற்றப்பட்ட பின் அவருக்குத் துணை நிற்க அங்கே யாரும் இல்லை. தமிழுக்குத் துணை நிற்க ஒரு தமிழனுமில்லை. பக்தனுக்குத் துணை நிற்க ஒரு பக்தனுமில்லை.

ஆறுமுகசாமி என்ற எஃகுறுதி மிக்க ஒரு கிழவனை முன்னிறுத்திப் போராடித் தமிழ் பாடும் உரிமையை நாங்கள் பெற்றோம். அரசாணை வந்ததை உலகறியும். அன்று காலை ஆறுமுகசாமி பாடப் போகிறார் என்பதை அந்த மாவட்டமே அறியும். தில்லைக் கோயிலைச் சுற்றியிருக்கும் ஆதீனங்கள் எத்தனை? தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள்..! எல்லாம் ஏக்கர் கணக்கில் தமிழ் வளர்த்த ஆதீனங்கள்! தமிழ் நெய்யால் தொந்தி வளர்த்த ஆதீனங்கள்! ஆறுமுகசாமியோ நெய்யைக் கண்ணாலும் கண்டறியாத ஒரு பரதேசி!

தில்லையைச் சுற்றித்தான் எத்தனை ஓதுவாமூர்த்திகள்! சைவத் திருமறை வளர்க்கத்தான் எத்தனை மன்றங்கள்! எத்தனை புலவர்கள், அறிஞர்கள், விழாக்கள், பட்டங்கள், விருதுகள்! வாய்க்கு வாய் 'திருச்சிற்றம்பலத்தை'மென்று துப்பும் உதடுகள்! ஆனால் உதைபட்டவர்களோ நெற்றி நிறைய நீரணிந்த பக்தர்கள் அல்ல. திருமறையில் ஒரு வரியைக் கூட ஓதியறியாத செஞ்சட்டை அணிந்த எமது தோழர்கள்!

எங்கள் பெருமையை எடுத்தியம்புவதற்காக இவற்றைக் கூறவில்லை. தமிழகத்தின் சிறுமையை எண்ணி மனம்

**நாம் மானமும் சொரணையும் உள்ள மக்களாயின் தமிழ் என்றைக்கோ சிற்றம்பல மேடை ஏறியிருக்கும். அதற்கு அரசாணையின் துணை தேவையில்லை. மானத்தையும் சொரணையையும் அரசாணையால் உருவாக்க முடியாது. சட்டத்தால் உரிமையை வழங்கத்தான் முடியும். அந்த உரிமையைப் பயன்படுத்தும் உணர்வை வழங்க முடியாது.**



படிப்பகம்

www.padippakam.com

நொந்ததனால் கூறுகிறோம். நாம் மானமும் சொரணையும் உள்ள மக்களாயின் தமிழ் என்றைக்கோ சிற்றம்பல மேடை ஏறியிருக்கும். அதற்கு அரசாணையின் துணை தேவையில்லை. மானத்தையும் சொரணையையும் அரசாணையால் உருவாக்க முடியாது. சட்டத்தால் உரிமையை வழங்கத்தான் முடியும். அந்த உரிமையைப் பயன்படுத்தும் உணர்வை வழங்க முடியாது.

கருணாநிதி அரசின் இடத்தில் ஜெயலலிதாவின் அரசு இருந்திருக்குமானால் இப்படியொரு அரசாணையே வந்திருக்காது. உண்மை தான். ஆளும் இந்த அரசாங்கங்களிடையே வேறுபாடு இருக்கிறது. ஆனால் ஆளப்படும் மக்கள்? ஒருவேளை இப்படியொரு அரசாணை வந்திருக்கவில்லையென்றாலும், தமிழகம் குமுறிக் கொந்தளித்து எழும்பியிருக்கப் போவதில்லை. கசப்பானதுதான், எனினும் இதுதான் உண்மை.

இந்த உண்மையைத்தான் வேறு வார்த்தைகளில் கூறுகிறார்கள் தீட்சிதப் பார்ப்பனர்கள். "யாருக்கும் பிரச்சினை இல்லை. இவர்கள் மட்டும்தான் பிரச்சினை செய்கிறார்கள்" என்று குற்றம் சாட்டுகிறார்கள். தீட்சிதன் வாயிலிருந்து வந்தாலும் உண்மை உண்மைதானே!

இந்த உண்மையின் காரணமாகத்தான் நந்தன் நுழைந்த தெற்கு வாயிலை அடைத்து தீட்சிதர்கள் எழுப்பிய தீண்டாமைச் சுவர் இன்னும் நின்று கொண்டிருக்கிறது.

சிற்றம்பல மேடையில் தமிழ் ஏறலாமென்ற அரசாணை வந்தபிறகும், தமிழர்கள் கிடைக்காமல் அந்த மேடை தவித்துக் கொண்டிருக்கிறது.

இத்தனைக்குப் பிறகும் ஆறுமுக சாமியின் போராட்டத்தைத் தொடர்வதற்கு அடுத்தொரு 'சாமி' வரவில்லையென்றால், எந்தச் சாமியின் மீதும் பூதத்தின் மீதும் நம்பிக்கையில்லாத கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் அந்த மேடைமீது ஏறிநின்று "உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்" என்று பாட வேண்டியிருக்கும். அது இன்னொரு வரலாற்றுச் சாதனையாக அமைய நேரிடும்.

அத்தகையதொரு 'சாதனை' தமிழகத்துக்கு நிச்சயம் பெருமை சேர்க்காது. எங்களுக்குச் சிறுமையும் சேர்க்காது.

## விலையேற்ற அறிவிப்பு

அன்பார்ந்த வாசகர்களே,

பத்து ஆண்டுகளுக்கு முன்பு புதிய கலாச்சாரத்தின் விலை ரூ.5 ஆக நிர்ணயிக்கப்பட்டபோது ஒரு கிலோ செய்திக்காகிதத்தின் விலை ரூ.18 ஆக இருந்தது. இன்று அந்த விலை ரூ.36 ஆக உயர்ந்து விட்டது. தயாரிப்புச் செலவு இருமடங்காகி விட்ட நிலையில் பொதுவான விலைவாசி உயர்வும் எம்மை சிரமத்திற்குள்ளாக்குகிறது.

கடந்த பல மாதங்களாக இதழ் முறையாக வெளிவருவதில்லை என்பதால் வெளிவந்த இதழ்களை நட்டத்திற்கே கொண்டு வந்தோம். இனியும் இந்த நட்டத்தை சுமக்க முடியாது என்பதால் அடுத்த இதழ் முதல் ரூ.10 என விலையை உயர்த்தியுள்ளோம். பக்கங்களையும் 28-லிருந்து 36-ஆக அதிகரித்துள்ளோம்.

இதழ் காலம் கடந்த வருவதால் சந்தாதாரர்களுக்கு சலுகைக் கட்டணத் தபாலில் அனுப்ப முடியவில்லை. முழுக் கட்டணத்தையும் செலுத்தியே அனுப்புகிறோம். எனவே புதிய சந்தாவைப் பொறுத்தவரை உள்நாட்டிற்கு ரூ.150, வெளிநாட்டிற்கு ரூ.500 எனவும் உயர்த்தியுள்ளோம். பழைய சந்தாதாரர்களுக்கு புதிய கட்டணத் தின்படியே இனி கணக்கிடப்படும்.

இந்தச் சிரமங்களைப் புரிந்து கொண்டு வாசகர்களும், தோழர்களும் தொடர்ந்து ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுடன்,
ஆசிரியர் குழு


**முடியாட்சிக்கு எதிரான நேபாள மக்களின் போராட்டத்தை ஆதரிப்போம்!**

**பொதுக்கூட்ட ஒலிக்குறுந்தகடு**

*19.02.2008 அன்று சென்னையில் இந்திய-நேபாள மக்கள் ஒற்றுமை அரங்கத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகள் ஆற்றிய உரையும், நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் (மாவோயிஸ்ட்) மத்தியக்குழு உறுப்பினர் தோழர் சி.பி. கஜுரேல் ஆற்றிய சிறப்புரையும் இக்குறுந்தகட்டில் இடம் பெற்றுள்ளன.*

விலை: ரூ. 30/-

வெளியீடு:
**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி**

**கிடைக்குமிடங்கள்:**

**புதிய கலாச்சாரம்**
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
அசோக்நகர்,
சென்னை - 600 083.
தொலைபேசி: 044-23718706

**கீழைக்காற்று வெளியீட்டகம்**
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை,
சென்னை - 600 002.
தொலைபேசி: 044-28412367



*"புதிய கலாச்சாரம்" உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள்*
*படிவம் IV (விதி 8-இன் படி)*

1. வெளியிடும் இடம் : 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு சென்னை - 600 031.

2. வெளியிடும் காலம் : மாதம் ஒருமுறை

3. அச்சிடுபவர் பெயர் : இரா. சண்முகராசு
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024.

4. உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர் : வி. வல்லபேசன்
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு சென்னை - 600 031.

5. ஆசிரியர் பெயர் : வி. வல்லபேசன்
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு சென்னை - 600 031.

வி. வல்லபேசனாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

1.3.2008 (ஒப்பம்) வி. வல்லபேசன்
வெளியிடுபவர்.

www.padippakam.com



# பள்ளி மாணவர் வன்முறை:

# நுகர்வு வெறியில் பிறக்கும் கொலைவெறி!

சம்பவம் 1. தெற்கு தில்லி, அரியானா எல்லையில் இருக்கும் குர்கான் நகரம். அங்கு யூரோ சர்வ தேசப் பள்ளியில் அவினாஷ், வினய் இருவரும் எட்டாம் வகுப்பு படிக்கி றார்கள். அதே வகுப்பில் படிக்கும் அபிஷேக் தியாகியுடன் தகராறு வரு கிறது. அவினாஷின் அப்பா ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர். வீட்டில் துப்பாக்கி வைத்திருக்கிறார். தொலைக் காட்சிப் பெட்டி அருகில் தயார் நிலை யிலிருந்த துப்பாக்கியை எடுத்துக் கொண்டு, அவினாஷ், வினய் இரு வரும் அபிஷேக்கைச் சுட்டுக் கொல்கி றார்கள்.

சம்பவம் 2. பெங்களூர் நகரம். ஆங்கில வழி வகுப்பில் படிக்கும் அந்த மாணவனது வீடு, பள்ளிக்கு அரு கில்தான் இருக்கிறது. வீட்டு மொட்டை மாடியில் ஏர் கன்னால் சுட்டுப் பழ குவது, இம்மாணவனது பொழுது போக்கு. அப்பா பொறியியலாளர், அம்மா மருத்துவர். இம்மாணவனை கன்னட வழி வகுப்பில் படிக்கும் இரு மாணவர்கள் கேலி செய்தார்களாம். இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத அந்த மாணவன், வீட்டின் மொட்டை மாடியிலிருந்து பள்ளி முடிந்து வரும் அந்த இரு மாணவர்களையும் துப்பாக் கியால் சுடுகிறான். இருவரும் சாக வில்லை என்றாலும், காயம்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்படுகி றார்கள்.

சம்பவம் 3. உத்திரப் பிரதேச மாநிலம், காஜியாபாத் மாவட்டம் மெனாரா கிராமத்தைச் சேர்ந்த அதர் சிங் +2 படிக்கும் மாணவன். உடன் படிக்கும் விபன் எனும் மாணவனை நாட்டுத் துப்பாக்கியால் சுட்டுக் கொல் கிறான். ''தங்கையை கேலி செய்யாதே எனப் பலமுறை எச்சரித்தும் கேட்கா ததால் விபனைச் சுட்டுக் கொன்றேன்'' என அதர் சிங் வாக்குமூலம் அளித் துள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

சம்பவம் 4. நாமக்கல் மாவட் டத்தில் இருக்கும் திருச்செங்கோடு நகரம். அங்கு வசதியான குடும் பத்தைச் சேர்ந்த ரஞ்சித் +2 படிக் கிறான். கிரிக்கெட்டில் ஆர்வம் கொண்ட ரஞ்சித், புது மட்டை வாங்கு வதற்கு பெற்றோர்களை நச்சரித்துப் பணம் வாங்குகிறான். லோகநாயகி என்ற வயதான பெண்மணி நடத்தும் விளையாட்டு பொருட்கள் விற்பனை யகத்துக்கு செல்லும் ரஞ்சித், அங்கு பல மட்டைகளைப் பார்த்தும் திருப்தி யடையவில்லை. தனது நேரத்தை வீண டிப்பதாக அவனிடம் லோகநாயகி நொந்து கொள்கிறார். இதை ஒரு பெரிய அவமானமாக எடுத்துக் கொண்ட ரஞ்சித், அந்தப் பெண் மணியைப் பழிவாங்க நினைக்கிறான். அவனது தாத்தா கந்தசாமி, தி.மு.க.வில் இரு முறை சட்டமன்றப் பதவிக்குப் போட்டியிட்டவர். வீட்டில் ஒரு வெளிநாட்டு கைத்துப்பாக்கியை வைத்திருக்கிறார். அதை எடுத்துக் கொண்ட ரஞ்சித், இருநாட்கள் கழித்து லோகநாயகி அம்மாளைச் சுட்டுப் படு காயப்படுத்துகிறான். அந்தப் பெண்மணி ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்படு கிறார்.



சுடப்பட்ட லோகநாயகி அம்மாள்.

•••

இந்நான்கு சம்பவங்களும், கடந்த சில மாதங்களில் நடந்து பத்திரிக்கைக ளில் பதிவானவை. மாணவர் மத்தியில் நடக்கும் இது போன்ற துப்பாக்கிச்சூடு நிகழ்வுகளுக்கு புகழ்பெற்ற நாடு அமெரிக்காதான். கடந்த பிப்ரவரி மாதத்தில் இலியானாஸ் பல்கலைக்கழ கத்தைச் சேர்ந்த முன்னாள் மாணவன் ஒருவன் சுட்டு, 5 மாணவர்கள் இறந்தி ருக்கின்றனர். இந்த அமெரிக்கப் பாணி வன்முறை இந்தியாவிலும் வந்து விட்டதா என்று சிலர் அதிர்ச்சியடை யலாம். வாழ்க்கை, பண்பாடு, பொருளாதாரம், அரசியல் அத்த னையும் அமெரிக்கமயமாகி வரும் போது, வன்முறை மட்டும் விதிவி லக்கா என்ன? அமெரிக்கா அளவுக்கு இங்கே துப்பாக்கிகள் மலிவாகப் பரவ வில்லையே தவிர, வன்முறை அதன் தன்மையளவில் மாணவர்களிடையே சமீப காலமாகப் பரவித் தான் வருகிறது.

இது சமூக அநீதிக்கு எதிராகக் கலகம் செய்யும் மாணவப் பருவத்திற் கேயுரிய போராட்ட வன்முறையல்ல; ஆடம்பரத்திற்காகவும், அற்பப் பிரச்சி னைகளைத் தீர்த்துக் கொள்ளவும் துப் பாக்கி எடுக்கும் தனிநபர் வன்முறை. மேற்கண்ட சம்பவங்களில் வன்மு றையின் கருவி துப்பாக்கியாக இருப்ப தினாலேயே போலீசும், பத்திரிக்கை களும் விசேடமாகப் பார்க்கின்றன. உண்மையில் துப்பாக்கியல்ல பிரச்சினை. விடலைப் பருவத்தின் வன்முறை மனோபாவம்தான் பிரச்சினை.

2006 டிசம்பர் மாதத்தில், சென்னை விருகம்பாக்கத்தில் இருக்கும் 13 வயதே நிரம்பிய அரவிந்த் என்ற சிறுவன் அவனது தெரு நண்பர் களாலேயே கொல்லப்படுகிறான். புத் தாண்டு கொண்டாட்டத்திற்குப் பண மில்லாததால், அரவிந்தை பணையக் கைதியாகக் கடத்தி, அவனுடைய அப் பாவிடமிருந்து தேவைப்பட்ட பணத்தைக் கறந்து விடலாம் என்று திட் டமிடுகிறார்கள். திட்டம் குளறு



படிப்பகம்

www.padippakam.com

படியாகி, அம்மாணவன் கோரமாகக் கொல்லப்படுகிறான். இதே காலத்தில் ஆடம்பர, கேளிக்கை வாழ்விற்காகப் பணம் திரட்ட நினைத்த மூன்று ஏழை மாணவர்கள், ஒரு நகைக் கடையைக் கொள்ளையடிக்க முயன்றபோது பிடி பட்டார்கள்.

இப்படிப் பரபரப்பிற்காகப் பத்திரிகைகளில் வெளிச்சமிடப்படும் சம்பவங்கள் பல இருந்தாலும், இவை எங்கோ ஒரு வீட்டில் நடப்பதாகவும், நம் வீட்டில் பிரச்சினையில்லை என்று பல பெற்றோர்கள் சுயதிருப்தி கொள்ளலாம். வன்முறையின் கடும் தருணங்கள் இங்குதான் வெடிக்க வேண்டுமென்று திட்டமிட்டுக் கொள்வதில்லை. அவை எங்கும் எப்போதும் நடக்கலாம். அதற்குத் தோதாக விடலைப் பருவ மாணவ வாழ்க்கை தயாராகி வருகிறது. அதில் நம் வீட்டுப் பையனும் இருக்கிறான் என்பதைப் பெற்றோர்கள் புரிந்து கொள்வதில்லை.

●●●

ஓரிரு தலைமுறைகளுக்கு முன்பு இருந்ததை விட, மேட்டுக்குடி மற்றும் நடுத்தர வர்க்கத்தின் வாழ்க்கை வெகுவாக மாறிவிட்டது. முன்பு ஆடம்பரமாகக் கருதப்பட்டவை, இன்று அத்தியாவசியமானவையாக மாறிவிட்டன. எல்லா வேலைகளுக்கும் நவீனக் கருவிகள்; அது போக வேலையாட்கள், குளிர்பதனக் கருவி, கார், இருசக்கர வாகனங்கள், செல்பேசிகள், பீட்ஸா, பர்கர் என்று மாறிவிட்ட உணவுப் பழக்கம், குடும்ப உறுப்பினராக மாறிவிட்ட தொலைக்காட்சி, வார இறுதியில் எல்லையில்லா கேளிக்கைகள்...

இலட்சக்கணக்கான விவசாயிகளைத் தற்கொலைக்குத் தள்ளிவரும் புதிய பொருளாதாரக் கொள்கைதான், நடுத்தர வர்க்கத்தை இப்படியொரு 'மகிழ்ச்சியான வாழ்க்கைக்குள்' பிடித்துத் தள்ளியிருக்கிறது. மற்றவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட வாழ்க்கையை, நவீன வசதிகளாக மாற்றித் தந்திருக்கும் உலகமயமாக்கம் உருவாக்கியிருக்கும் இந்த வாழ்க்கையின் தன்மைதான் என்ன? எல்லா வகை உடலுழைப்பையும், சமூக உறவுகளையும் ரத்து செய்துவிட்டு, கேளிக்கை, நுகர்வு ஒன்றையே இலக்காகக் கொண்டு ஓடும் இந்த வாழ்க்கை, சிறார்களின் உலகை என்னவாக மாற்றியிருக்கிறது?

**மற்றவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட வாழ்க்கையை, நவீன வசதிகளாக மாற்றித் தந்திருக்கும் உலகமயமாக்கம் உருவாக்கியிருக்கும் இந்த வாழ்க்கையின் தன்மைதான் என்ன? எல்லா வகை உடலுழைப்பையும், சமூக உறவுகளையும் ரத்து செய்துவிட்டு, கேளிக்கை, நுகர்வு ஒன்றையே இலக்காகக் கொண்டு ஓடும் இந்த வாழ்க்கை, சிறார்களின் உலகை என்னவாக மாற்றியிருக்கிறது?**

**வன்முறை கற்றுத்தரும் கார்ட்டூன் தொடர்கள்!**

குழந்தைகளுக்கு விருப்பமான கார்ட்டூன் சேனல்கள் இன்று தமிழிலேயே வந்து விட்டன. பள்ளிக் கல்விக்கு ஆங்கிலமும், பொழுது போக்குவதற்கு மட்டும் தமிழ் என்பது ஒரு முரண்பாடாகத் தோன்றலாம். குழந்தைகள் மனதை தாய்மொழியில்தான் கொள்ளை கொள்ள முடியும் என்பது அந்தச் சேனல்களைச் சந்தைப்படுத்தும் முதலாளிகளுக்குத் தெரியும்; சுட்டி டி.வி.யையும், தமிழ் ஜெட்டிக்ஸையும் சிறார்கள் நீண்ட நேரம் வெறித்துப் பார்க்கிறார்கள். அப்படிப் பார்ப்பதற்காகவே விரும்பிக் காத்திருக்கிறார்கள். அதற்காகவே வீட்டுப் பாடத்தை விரைந்து முடிக்கிறார்கள். அவர்களது கற்பனை உலகை கார்ட்டூன்களும், யதார்த்த உலகை கார்ட்டூன்களுக்கு இடையில் வரும் விளம்பரங்களும் கட்டியமைக்கின்றன. ஆசை தோற்றுவிக்கும் ஏக்கத்திற்கும், அது நிறைவேற தடையாக இருக்கும் யதார்த்தத்திற்கும் இடையிலான இந்த மாய உலகின் முரண்பாட்டில்தான் இளம்பருவத்து மாணவர்கள் உலவுகிறார்கள்.

பவர் .ரேன்ஜர்ஸ் அவர்கள் விரும்பிப் பார்க்கும் ஒரு தொடர். கிராபிக்ஸ் உதவியோடு வண்ணச் சிதறலாகத் தெறிக்கும் இத்தொடரில் அடிப்பது, வெட்டுவது, சுடுவது, வெடிப்பது எல்லாம் நொடிக்கொரு தடவை நடக்கிறது. நமக்கு ஓரிரு நிமிடங்களில் சலித்துப் போகும் இத்தொடர், அவர்களுக்குச் சலிப்பதில்லை. கிராஃபிக்ஸ் இல்லாமல், நிஜத்தில் மாமிச மலைகள் மோதும் டபிள்யூ.டபிள்யூ. எஃப் மல்யுத்தச் சண்டைகளும் ஜெட்டிக்சில் காண்பிக்கப்படுகின்றன. வகை தொகையில்லாமல் மனிதர்கள் அடித்துக் கொள்ளும் இந்த வன்முறைக் காட்சிகளைத் தொடர்ந்து பார்ப்பதால் ஏற்படும் விளைவுகள் என்ன?

சக மனிதன் அடிபட்டாலோ, இரத்தம் சிந்தினாலோ, இறந்து போனாலோ அதிர்ச்சியடைவது மனித இயல்பு. சிறார்களின் உலகில், இந்த உள்ளார்ந்த மனித மதிப்பீடுகள் நமத்துப் போகின்றன. வன்முறை குறித்த இரக்கமோ, பயமோ இல்லாதது மட்டுமல்ல, அவர்களே அதைச் செயல்படுத்துபவர்களாகவும் மெல்ல மெல்ல மாறுகிறார்கள். அற்பப் பிரச்சினைகளாக இருந்தால் கூட, அதை வன்முறை மூலம் தீர்த்துக்கொண்டு இறுதி வெற்றி அடையவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருக்கிறார்கள். விளைவறியாத இளங்கன்றுகளாக இருப்பதால், இத்தகைய வன்முறை அவர்களது ஆளுமையின் அங்கமாகிறது.

விலங்குகளையும் இயற்கையையும் நேரில் கண்டு கற்கவேண்டிய வயதில், மிக்கி மவுசின் பொருளற்ற வேடிக்கைகளில் காலந்தள்ளுகிறார்கள் சிறார்கள். அதிலும் விலங்குகளை மையமாக வைத்து எடுக்கப்படும் கார்ட்டூன் தொடர்கள், இப்போது அருகி வருகின்றன. சண்டைக் காட்சிகளை மையமாக வைத்து எடுக்கப்படும் அதிதீவிர வீரர்களின் தொடர்களே இன்று பெருகி வருகின்றன. இவற்றின் வன்முறைக்கு ஒத்திசைவான விதத்தில் இடையில் வரும் விளம்பரங்களும் குழந்தைகளைப் போட்டுத் தாக்குகின்றன. பெரியவர்களுக்கு வேண்டுமானால் விளம்பரங்கள் மீது சலிப்பு வரலாம். சிறியவர்களுக்கு அவைதான் பாலபாடம்.

**விளம்பர உலகில் வெதும்பும் சிறார்கள்!**

சில விநாடிகள் மட்டுமே வரும் விளம்பரங்களின் செய்தி, நாள் முழுக்க சிறுவர்களை இயக்குகின்றது. அவர்களது அறிவுத்திறனின் அடிப்படையே விளம்பரங்கள்தான். வேகமான படத்தொகுப்புக்களில் விரைந்து செல்லும் விளம்பரத்தின் சிறு செய்தி கூட, சிறுவர்களின் மனதில்


படிப்பகம்

www.padippakam.com

தைப்பதற்குத் தவறுவதில்லை. விளம்பரங்கள் செதுக்கித்தரும் 'மகிழ்ச்சியான குடும்பம்' உண்மையில் ஒரு கற்பனைதான் என்றாலும், அந்த மகிழ்ச்சியான வாழ்க்கைக்காகச் சிறுவர்கள் ஏங்குகிறார்கள். இயற்கையின் இயக்கத்தையும், சமூகத்தின் போராட்டத்தையும் அறிய வேண்டிய இளம் பருவம், இத்தகைய செயற்கையான, சுயநலம் மிகுந்த, ஆடம்பரமான கற்பனை உலகத்தில் வெம்பி வாடுகிறது. பஞ்சில் பழுத்த மனம், தான் காணும் தொலைக்காட்சி வாழ்க்கை கிடைக்காத போது வன்முறையின் பக்கம் எளிதாக நகருகிறது.

சந்தையில் அறிமுகமாகும் புதிய பொருள் எது, எது வாங்கினால் எது இலவசம், எதற்குத் தள்ளுபடி, எந்தக் கடையில் என்ன கிடைக்கும் முதலான நுகர்வுக் கலாச்சார பொது அறிவில், குழந்தைகள் பெரியவர்களை விஞ்சி நிற்கிறார்கள். அவ்வகையில் முதலாளிகளின் விளம்பரங்களுக்கு பிரச்சார பீரங்கிகளாக சிறுவர்களே விளங்குகிறார்கள். ஒரு குடும்பத்தில் ஒரு புதிய பொருளை வாங்க வேண்டுமென்ற போராட்டம், அநேகமாக சிறியவர்களிடமிருந்துதான் துவங்குகிறது.

வானவேடிக்கை போல விளம்பரங்களை வாரி இறைக்கும் இன்றைய முதலாளித்துவத்தின் அடிப்படைகளில் ஒன்றான நுகர்வுக் கலாச்சாரம், தன்னளவிலேயே ஒரு வன்முறையைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு புதிய செல்பேசி, கார், தொலைக்காட்சி முதலானவை அறிமுகமாகும் போதும் அவற்றின் பழைய மாடல்களை வைத்திருப்பவர்களிடம், ஒரு பதட்டம் பற்றிக் கொண்டு விடுகிறது. புதியதை வாங்கும் வரை, மனம் அமைதியடைவதில்லை. பங்குச் சந்தை குறியீட்டெண் போல, ஒவ்வொரு புதிய விளம்பரமும் இந்த மெல்லிய வன்முறையின் அளவைக் கூட்டுகிறது. இதில் சிக்கியிருக்கும் பெரியவர்களின் கதியே இதுவென்றால், சிறியவர்களைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை.

விளம்பரங்களின் வழியாக மனதில் பதியும் புதிய பொருளை வாங்க வேண்டுமென்று சிறார்கள் அடம் பிடிக்கிறார்கள்; சண்டை போடுகிறார்கள். வகுப்புத் தோழர்களிடம் அற்பவிசயங்களுக்காக எழும் பொறுமையின்மைக்கான அரிச்சுவடி, இதிலிருந்து ஆரம்பிக்கிறது. அவ்வகையில் சகிப்புத் தன்மையற்ற மனநிலையை நுகர்வுக் கலாச்சாரம் கற்றுத் தருகிறது. நச்சரிப்பு தாங்காத பெற்றோர்களும், கேட்டதை வாங்கித் தருகிறார்கள். பிடிவாதம் பிடித்தால் நினைத்ததை வாங்கிக் கொள்ளலாம் என்பதைக் குழந்தைகள் தமது சொந்த அனுபவத்தில் அறிந்து கொள்கிறார்கள். இந்தப் பிடிவாதம்தான் வன்முறையின் துவக்கப் புள்ளி என்பதைப் பெற்றோர்கள் உணர்வதில்லை.

சிறார்கள் உலகை வன்முறையால் வடிவமைக்கும் கார்ட்டூன் தொடர்கள், வீடியோ விளையாட்டுக்கள்.



''இந்த உலகத்தில் பெரும்பான்மை மக்களுக்கு என்ன கிடைக்கிறதோ அதுதான் நமக்கும்'' என்று போதித்து வளர்ப்பதுதான், குழந்தைகளை ஒரு சமூக மனிதனாக வளர்ப்பதற்குரிய ''சரியான அணுகுமுறை. மாறாக ''இந்த உலகில் நீ மட்டும்தான் முக்கியம், உன் மகிழ்ச்சிதான் எங்கள் மகிழ்ச்சி'', என்று குழந்தைகளைச் சீராட்டிப் பாராட்டி வளர்க்கிறார்கள் பெற்றோர்கள். இப்படிச் செல்லம் கொடுத்து வளர்க்கப்படும் சிறுவர்களிடம்தான் பொறுமையின்மையும், கோபமும், பிரிக்க முடியாதபடி ஒட்டிக் கொள்கின்றது. இந்த எதிர்மறைப் பண்புகளின் விளைவு குறித்து இவர்களுக்கு எதுவும் தெரியாது என்பதால் இவர்கள் யாருக்கும் அடங்குவதில்லை.

ஆனால் இவர்களின் பல தவறுகள் பெற்றோரால் மன்னிக்கப்படுகின்றன. நிகழ்காலத்தில் கண்டிக்கப்படாத தவறுகள், எதிர்காலத் தவறுகளுக்கான ஊக்கசக்தியாக மாறிவிடுகின்றன. துப்பாக்கியால் சக மாணவனைச் சுடுவதென்பது, நிச்சயம் அவர்களது முதல் தவறாக இருந்திருக்க முடியாது. துப்பாக்கி வெடிப்பதற்கு முன்பே வன்முறையின் வெவ்வேறு வடிவங்கள் அவர்களிடம் வெடித்திருக்க வேண்டும். அந்தப் பட்டியலில் இன்னொன்று என்று, அந்த மாணவர்கள் துப்பாக்கிச் சூட்டைப் பற்றி அலட்சியமாகக் கருதியிருக்க வேண்டும். அல்லது, அப்பொதெல்லாம் தங்களைக் காப்பாற்றியிருக்கும் பெற்றோர்கள் இப்போதும் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையும் அவர்களை இந்த எல்லைக்கு கொண்டு வந்திருக்கக்கூடும்.

### செல்பேசி – இணையத்தில் சீரழியும் மாணவர்கள்!

சென்ற தலைமுறைப் பெற்றோர்கள் அளவிற்குக் கூட, இந்தத் தலைமுறைப் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை கண்டிப்போடும், ஒழுக்கத்தோடும் வளர்ப்பதில்லை. அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுத்தால் பிரச்சினை முடிந்து விடும் என்று கருதுகிறார்கள். உண்மையில் அப்போதுதான் பிரச்சினை ஆரம்பிக்கிறது. நடுத்தர வர்க்கத்தின் முந்தைய தலைமுறையைச் சேர்ந்த மாணவர்களுக்கு, கல்லூரி சென்றால்தான் அதிகபட்சமாக


படிப்பகம்

www.padippakam.com

சைக்கிளோ, கைக்கடிகாரமோ கிடைத்தது. இன்றோ பள்ளியிறுதி யாண்டுகளிலேயே இருசக்கர வாகனம் மாணவர்களின் கனவாகி விட்டது. முக்கியமாக செல்பேசி வைத்திருப்பது, மாணவ நாகரீகத்தின் அளவு கோலாகப் பரவி வருகிறது.

ஆளும்வர்க்கத்தின் கலாச்சாரத் தாக்குதலுக்கு முக்கியமான படைக்கலனாக இருக்கும் செல்பேசி, மாணவ சமுதாயத்தை சீர்குலைப்பதற்கு கச்சிதமான கையடக்கக் கருவியாகும். ஒரு புதிய செல்பேசியிலிருக்கும் தொழில் நுட்ப சாத்தியங்கள், பெரியவர்களுக்குக் கூடத் தெரிவதில்லை. சிறியவர்களே அதில் விற்பன்னர்களாக இருக்கிறார்கள். செல்பேசி நிறுவனங்களும், மாணவர்களுக்கென்றே சிறப்புத் திட்டங்களை அவ்வப்போது அறிவிக்கின்றன. அதில் தவறாமல் இலவசக் குறுஞ்செய்திகள் அனுப்பும் வசதி நூற்றுக்கணக்கில் இருக்கும். நாட்டு நடப்பு குறித்து செய்தித் தாள்களின் பக்கம் தலையெடுத்தும் பார்க்காத மாணவர்கள், குறுஞ்செய்தி அரட்டைகளில் மூழ்குகின்றனர். கடி ஜோக்ஸ், காதலர் தினம் என்று ஆரம்பித்து, இறுதியில் பாலுறவு விரசங்களில் மூழ்குகின்றனர்.

சென்ற ஆண்டு, டெல்லியில் தன் வகுப்பு மாணவியுடன் உறவு கொண்டு, அதை காமரா செல்பேசியில் படம்பிடித்து தன் நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டான், ஒரு மாணவன். இத்தகைய வக்கிரக் கலாச்சாரம் மாணவர்களிடையே வெகுவேகமாகப் பரவி வருகிறது. பார்க்கும் பெண்களை ஆபாசக் கோணத்தில் படம்பிடிப்பதும், பரப்புவதும் ஒரு பொழுது போக்காக நிலை பெற்று விட்டது. இத்தகைய படங்களை கட்டணம் வாங்கிக் கொண்டு பதிவுசெய்து தருவதற்கென்றே பல இணையத்தள தரகர்கள் இருக்கின்றனர். மேலும் இன்று இணையத்தள மையங்கள் அனைத்தும் மாணவர்களை நம்பியே நடத்தப் படுகின்றன. இணையத்தில் உலாவுவதற்கு வீட்டில் கணினி இருக்க வேண்டிய அவசியமில்லை. பத்து ரூபாயில், பலான விசயங்களை டன் கணக்கில் மேய்ந்து விடலாம். ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடற்று, இந்த நச்சுப் பண்பாடு கைக்கெட்டிய தூரத்தில் மாணவர்களுக்குக் கிடைக்கிறது. என்பதுதான் முக்கியமானது.

விடலைப் பருவத்தில், பாலியல் உறுப்புகள் முதிர்ச்சி அடையும்

**''இந்த உலகத்தில் பெரும்பான்மை மக்களுக்கு என்ன கிடைக்கிறதோ அதுதான் நமக்கும்'' என்று போதித்து வளர்ப்பதுதான், குழந்தைகளை ஒரு சமூக மனிதனாக வளர்ப்பதற்குரிய ''சரியான அணுகுமுறை. மாறாக ''இந்த உலகில் நீ மட்டும்தான் முக்கியம், உன் மகிழ்ச்சிதான் எங்கள் மகிழ்ச்சி'', என்று குழந்தைகளைச் சீராட்டிப் பாராட்டி வளர்க்கிறார்கள் பெற்றோர்கள்.**

வயதில், செக்ஸ் என்பது ஒரு புகை மூட்டம் போல மர்மமாய்க் கவிந்திருக்கும் சூழல் இன்று இல்லை. பாலியல் உணர்வில் கட்டுப்பெட்டித் தனம் கொண்டிருந்த இந்திய மனநிலையின் மடையை, இணையத்தின் வெள்ளம் உடைத்திருக்கிறது. திருமணத்துக்கு முந்தைய உறவு மாணவர்களிடம் வேகமாக வளர்ந்து வருவதாக, பல்வேறு ஆய்வுகள் சுட்டிக் காட்டிகின்றன. இதற்குத் தீர்வாக, மாணவர்களுக்குப் பாலியல் கல்வியைக் கற்றுக் கொடுக்கவேண்டும் என்று பல கல்வியலாளர்கள் முன்வைக்கின்றனர்.

எய்ட்ஸைக் கட்டுப்படுத்துவதற்கு ஆணுறை போடுங்கள் என்பது போலத்தான் இதுவும். இதனால் பாலியல் கல்வி வேண்டாம் என்பதல்ல. ஆனால் பிரச்சினைக்கு அது தீர்வல்ல. சொல்லப் போனால் மாணவப் பருவத்தில்தான் கட்டுப்பாடுகள் மிக அவசியம். அறியாக் குழந்தை கண்டதையும் வாயில் போடும்போது, சிறிது அடித்துத் திருத்துவதில் என்ன தவறு இருக்கிறது?

### வளரும் பருவத்தை வலிமையாக்கும் கட்டுப்பாடு!

அப்படி ஒரு கட்டுப்பாட்டை, அதாவது கல்லூரி வளாகத்தில் செல்பேசியைப் பயன்படுத்தக்கூடாது என்று அண்ணா பல்கலைக் கழகத்தில் அறிமுகப்படுத்திய போது, பத்திரிக்கைகளும், முற்போக்கு முகாமும் ஆவேசத்துடன் அதனைக் கண்டித்தன. இது சுதந்திரத்துக்கும், தனிநபர் உரிமைக்கும், ஜனநாயக நெறிமுறைகளுக்கும் எதிரானது என்று வாதிட்டார்கள். அமெரிக்க மாணவர்களிடையே வன்முறையை நிறுத்துவதற்கு துப்பாக்கி வியாபாரத்தைத் தடை செய்யவேண்டும் என்ற கோரிக்கை எழுந்தபோது, ஜனநாயக உரிமையின் பெயரால்தான் அது அங்கே நிராகரிக்கப்பட்டது.

இந்த வாதங்களில் ஒரு வெங்காய 'உரிமை'யும் உண்மையில் இல்லையென்பது ஒருபுறமிருக்க, இந்த உலகமே கட்டுப்பாட்டில்தானே இயங்கி வருகிறது? ஒரு தொழிலாளிக்கு சீருடை அணிய வேண்டும், குறித்த நேரத்திற்கு வேலைக்கு வர வேண்டும், குறிப்பிட்ட இடைவெளி நேரத்தில்தான் மதிய உணவு அருந்த வேண்டும் என்று பல கட்டுப்பாடுகள் இல்லையா? பல அலுவலகங்களிலும் செல்பேசியில் பேசக்கூடாது என்று கட்டுப்பாடு வைத்திருக்கிறார்களே; இதனால் என்ன குடி முழுகிப் போய் விட்டது? விதியின் பெயராலும், நடைமுறை ரீதியிலும் உழைக்கும் வர்க்கத்தின் மீது ஆயிரம் கட்டுப்பாடுகள் வைத்திருக்கும் முதலாளித்துவம், சமூகத்தில் சீரழிவுக் கலாச்சாரத்தைப் பரப்புவதற்கு மட்டும் தனக்கு சுதந்திரத்தைக் கோருகிறது.

வீட்டிலும், பள்ளியிலும் கட்டுப்பாடு இல்லாத மாணவர்கள்தான், வன்முறை எண்ணம் கொண்டவர்களாகத் தலையெடுக்கின்றனர். விடலைப்பருவ உளவியலின் காரணமாகப் பெற்றோருடனும், சூழலோடும் முரண்படுகிறார்கள். மாணவர்களின் உடல் மாற்றத்திற்கேற்ப நடக்கும் இந்த உளவியல் வெளிப்பாடுகளை, மேற்கண்ட நச்சுக்கலாச்சாரம் ஊதிப் பெருக்குகிறது. இதனால் தனிமைப்படும் மாணவர்களைத்தான் வன்முறை எண்ணம் தின்று சீரணிக்கிறது. மாணவர்களை உடலுழைப்பிலும், விளையாட்டிலும் ஈடுபடுத்துவதுதான் இந்த முரண்பாட்டைத் தீர்ப்பதற்குரிய வழி. ஆனால் அந்தச் சூழல் நமது கல்வி முறையிலோ, பண்பாட்டிலோ இல்லை.

### வளரும் சிறுவருக்கு உடலுழைப்பு அவசியம்!

இளம் மாணவர்களின் வயதினையொத்த சிறார்கள், நாடெங்கிலும் இலட்சக்கணக்கில் உதிரித் தொழில்


படிப்பகம்

www.padippakam.com

களில் ஈடுபடுகின்றனர். குழந்தைத் தொழிலாளர் உழைப்பைத் தடை செய்ய வேண்டும் என இவர்களது வாழ்க்கை குறித்து கவலைப்படுவது தொண்டு நிறுவனங்களின் நாகரீகப் பணியாக இருக்கிறது. படிக்க வேண்டிய வயதில் இவர்களை இவ் வேலைகளுக்கு அனுப்பியது பெற்றோர்களின் குற்றமெனத் தொண்டு நிறுவனங்கள் சாதிக்கின்றன. உண்மையில் பணமில்லாதவனுக்கு எதுவுமில்லை என இந்தச் சமூக அமைப்பை மாற்றிய அரசும், ஆளும் வர்க்கங்களும்தான் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டும்.

இது ஒருபுறமிருக்க, இக்குழந்தைகள் விடலைப் பருவச் சேட்டைகளையோ, வன்முறைகளையோ செய்வதில்லை. தேநீர்க்கடைகளில் குவளை கழுவும் சிறுவனோ, ஓட்டலில் மேசை துடைக்கும் சிறுவனோ இத்தகைய வன்முறை வெறிக்குப் பலியாவதில்லை. சமூகத்துடன் யதார்த்தமான உறவில் இருக்கும் இச்சிறுவர்கள், பண்பையும் முதிர்ச்சியையும்தான் பழகிக் கொள்கின்றனர். வயதுக்கு மீறிய அதீத உழைப்புதான், இவர்களைப் பின்னாளில் உதிரிக் குணம் கொண்டவர்களாக மாற்றி விடுகிறது. அப்போதும்கூட இவர்கள், சமூகத்தின் மீது வன்முறை செலுத்தும் மேட்டுக்குடிப் பொறுக்கிகளைப் போல மாறுவதில்லை.

ஆம். மாணவர்களை குறிப்பிட்ட அளவில் உடலுழைப்பில் ஈடுபடுத்துவதன் மூலமே, அவர்களது பருவப் பிரச்சினைகளைக் கடந்து ஒரு சமூக மனிதனாக வளர்க்க முடியும். கோடை விடுமுறையில் சிறுவர்களை சிறு பட்டறைகளுக்கோ, இருசக்கர வாகன பழுது நீக்கும் கடைக்கோ, கட்டிட வேலைக்கோ, விவசாய வேலைக்கோ அனுப்பினால், பட்டை தீட்டப்பட்ட வைரக்கற்களாகப் புடம் போடப்பட்டு வருவார்கள். உடலுழைப்புடன் கூடிய சுயமதிப்புடன் சமூகத்தைப் பற்றி அறிந்து கொள்வார்கள். கட்டுப்பாட்டுடன் பணியாற்றுவதன் மூலமே இச்சமூகத்தின் அங்கத்தினன் என்ற தகுதியைப் பெறமுடியும் என்பதைத் தங்களது சொந்த அனுபவத்திலிருந்து புரிந்து கொள்வார்கள்.

ஆனால் நடுத்தர வர்க்கமோ தங்களது செல்வங்களை டென்னிசுக்கும், கணினிப் பயிற்சிக்கும், பாட்டு வகுப்பிற்கும் அனுப்பி நம்பர் 1 ஆக்குவதற்கு மட்டுமே மனப்பால் குடிக்கிறது. இது மாணவர்களுக்கு தனிநபர் வாதத்தையும், சுயநலத்தையும், காரிய வாதத்தையும் கற்றுத் தருகின்றதே ஒழிய, நல்ல குடிமகனாக்குவதில்லை. மேலும் கடுமையான போட்டிகள் நிறைந்த இக்காலட்டத்தில், தோல்வி குழந்தைகள் மனதை ரணமாக்குகிறது. விஜய் டி.வி.யின் பாட்டுப் போட்டியில் தோல்வியுற்றதால் வெளியேற்றப்பட்ட குழந்தைகள் அழுவதைப் படம் பிடித்துக் காண்பிப்பதை இங்கு நினைவு படுத்திக் கொள்வோம்.

தின்று கொழுக்கும் நடுத்தர வர்க்கச் சிறுவர்கள், பசியால் சாகும் ஆப்பிரிக்கச் சிறுவர்கள், உலகமயத்தின் இரு முகங்கள்!



வளரும் குழந்தைகளுக்கு கலைத் திறமைகளை கற்றுத்தருவதை விட, அவர்களை மக்களின் பால் பற்று கொண்ட நன்மக்களாக மாற்றுவதே அத்தியாவசியமானது. உண்மையில் அவர்களது வன்முறை எண்ணத்தை மடைமாற்றும் சூட்சுமம், இதில்தான் அடங்கியிருக்கிறது. ஆனால் நடுத்தர வர்க்கக் குழந்தைகளுக்கு, உடலுழைப்பு அறவே கிடையாது. எல்லா வேலைகளுக்கும் இயந்திரங்கள் இருக்கின்றன. இது போக வேலையாட்கள்! பெற்றோர்கள் பணியாட்களை மிரட்டுவது போல பிள்ளைகளும் செய்கிறார்கள். குறைந்த பட்சம் தன்னைப் பராமரித்துக் கொள்வதைக் கூட இக்குழந்தைகள் செய்வதில்லை. பெற்றோரும் விரும்புவதில்லை. தான் சாப்பிட்ட தட்டைக் கழுவுவதற்கோ, உடுத்தும் உடையைத் துவைப்பதற்கோ பழகிக் கொள்ளாத ஒரு சிறுவன்தான், இந்த உலகம் தனக்காகப் பணிசெய்ய படைக்கப்பட்டிருப்பதாக எண்ணுகிறான். இந்த அணுகுமுறையில் நெருடல் வரும்போது, தவிர்க்கவியலாமல் வன்முறையின் பக்கம் நகர்கின்றான்.

## அருகும் விளையாட்டு அரிக்கும் வீடியோ விளையாட்டு!

உடலுழைப்புக்கு அடுத்த படியாக குழந்தைகளுக்குத் தேவைப்படுவது, வியர்க்க விறுவிறுக்க விளையாடப்படும் விளையாட்டு. மனம் விரும்பிச் செய்யப்படும் இவ்வுழைப்பில்தான் அவர்கள் வளருவதற்கேற்ற வலிமை உடலுக்கும், உள்ளத்திற்கும் கிடைக்கிறது. குழுரீதியான உணர்வு பெறுவதற்கும், சண்டையுடன் கூடிய நட்பு அரும்புவதற்கும், வெற்றி தோல்விகளையெல்லாம் சகஜமாக எடுத்துக் கொள்வதற்கும், பாடங்கள் கற்பதற்கேற்ற உற்சாகத்தைப் பெறுவதற்கும், விளையாட்டு அவசியமாகிறது. அடுக்குமாடிக் கட்டிடங்கள் துருத்தி நிற்கும் நகரங்களில், மைதானங்கள் காணக் கிடைப்பதில்லை. பல்லாயிரம் ரூபாய்களைக் கட்டணங்களாக வசூலிக்கும் தனியார் பள்ளிகளிலும், விளையாட்டுத் திடல்கள் போதுமானதாக இல்லை. மாணவர்களும் இந்திய அணி ஆடும் சமயங்களில் மட்டும் கிரிக்கெட் ஆடுவதைத் தவிர, விளையாட்டில் விருப்பத்துடன் ஈடுபடுவதில்லை.


படிப்பகம்

www.padippakam.com

**தேநீர்க்கடைகளில் குவளை கழுவும் சிறுவனோ, ஓட்டலில் மேசை துடைக்கும் சிறுவனோ இத்தகைய வன்முறை வெறிக்குப் பலியாவதில்லை. சமூகத்துடன் யதார்த்தமான உறவில் இருக்கும் இச்சிறுவர்கள், பண்பையும் முதிர்ச்சியையும்தான் பழகிக் கொள்கின்றனர்.**

இந்த இடத்தை மாணவர்களால் பரவலாக விளையாடப்படும் வீடியோ விளையாட்டு எடுத்துக் கொள்கிறது. இணையத் தள மையங்களில் பாலுறவு விசயங்களுக்கு அடுத்தபடியாக மாணவர்கள் விரும்புவது இந்த எந்திர விளையாட்டைத்தான். வியர்வைத் துளிகளுக்கு வேலை கொடுக்காமல், மூளையை அரிக்கும் இந்த விளையாட்டைத் தொடர்ந்து விளையாடும்போது மாணவர்கள் அதற்கு அடிமையாகிறார்கள்.

இந்தப் போதையிலிருந்து மீள்வது சிரமம் என்பதோடு, இது ஏற்படுத்தும் உளவியல் கோளாறுகள் அதிகம். கற்பனையான உலகில் கற்பனையான வெற்றிக்காக மணிக்கணக்கில் ஆடும் மாணவர்கள், அதீத உணர்ச்சிக்கு ஆட்படுகிறார்கள். இந்த உணர்ச்சிச் சமநிலைச் சீர்குலைவு வன்முறைக்குப் பொருத்தமான சமன்பாட்டைக் கொண்டிருக்கிறது.

விளையாடி முடித்ததும் ஏற்படும் சோர்வு நிஜ உலகோடு கொண்டுள்ள உறவைச் சோர்வுக்குள்ளாக்குகிறது. இந்தச் சோர்விலிருந்து வாழ்வின் பிற அம்சங்கள் மீது அளவு கடந்த சோம்பல் உருப்பெறும். கணிப்பொறி விளையாட்டின் மீது ஒன்றி பரவசம் அதிகரிப்பதற்கேற்ப மனித உறவுகளின் மீது நெருடல் அதிகரிக்கிறது. பிரச்சினை வரும்போது அமைதியுடன் எதிர்கொள்ள வேண்டிய மூளையின் தன்மை, நேரெதிராக மாற்றப்படுகிறது. வீடியோ விளையாட்டின் வேகம் விரிவடைதற்கேற்ப, நிஜவாழ்வின் பிரச்சினைகளை பரிசீலிக்கும் பொறுமை சுருங்குகிறது.

### விதவிதமான உணவு வகை எல்லைமீறும் உணர்ச்சிகள்!

இப்படி உடலுழைப்பிலும், விளையாட்டிலும் அன்னியப்பட்டுள்ள மாணவர்கள் விரும்பும் மற்றுமொரு விசயம் நவீன உணவு வகைகள். பீட்ஸா, பர்கர், விதவிதமான சாக்லேட், பிஸ்கட், ஐஸ்கிரீம் வகைகள், பெட்டிக் கடைதொட்டு சரம்சரமாகப் பல வண்ணங்களில் தொங்கும் நொறுக்குத்தீனி பாக்கட்டுகள், உணவகங்களில் கிடைக்கும் பல நாட்டுத் துரித உணவு வகைகள்.... இவையெல்லாம் தொலைக்காட்சி விளம்பரங்கள் போல, குழந்தைகள் மனதில் ஆழப்பதிந்து விட்டன.

குடும்பத்துடன் வெளியில் செல்லும்போது சிறார்கள் அடம்பிடித்துச் சண்டையிடுவது இவ்வுணவு வகைகளுக்காகத்தான். வீட்டுச்சமையல் என்பதே இப்படி டப்பா வகை உணவுப் பிரிவுக்கு வேகமாக மாறி வருகிறது. இது பற்றி பத்திரிக்கைகளும், தொலைக்காட்சிகளும், மருத்துவர்களும் கவலைப்படாமல் இல்லை. ஆனால் அந்தக் கவலை, குழந்தைகள் குண்டாவது குறித்த பிரச்சினையாக மட்டுமே நின்று விடுகிறது.

உண்மையில் இந்த 'குண்டு' பிரச்சினை இரண்டாம் பட்சமானதுதான். நவீன உணவு வகைகளில் சர்க்கரையும், உப்பும், கொழுப்பும் மிக அதிகம். ஒரு சிறுவனது உடலில் இம்மூன்றும் திடீரென்று அதிகரிக்கும்போது அது மூளையின் செயல்பாட்டைப் பாதிக்கிறது. இப்படி தொடர்ந்து தின்று தீர்க்கும் சிறுவர்கள், அவற்றைச் செலவழிக்கும் உடலுழைப்பு ஏதும் இல்லாததால் எளிதில் உணர்ச்சி வசப்படுவர்களாக மாறுகிறார்கள். எல்லா வகை உணர்ச்சிகளும் எல்லை மீறும்போது, அதன் இறுதி நிலை வன்முறையில் தான் முடியும். இதுபோக உடல் பருமனாவதால் சோம்பேறிகளாகவும், மந்தகதிக் குழந்தைகளாகவும் நாட்களைத் தள்ளுகிறார்கள். ஏற்கெனவே அவர்களது வாழ்க்கைச் சூழல் இப்படித்தான் உள்ளது எனும்போது, டப்பா வகை உணவுகள் அந்தச் சூழலை வீரியமாக்குகின்றன. பெற்றோர்களே இந்த நவீன உணவு வகைகளுக்கு அடிமையாகும் போது, குழந்தைகளைக் கடைத்தேற்றுவதற்கு வழியேதுமில்லை.

### அரசு பள்ளி நன்மைகள் தனியார் பள்ளி தீமைகள்!

இந்த நொறுக்குத் தீனிகளின் பெயர்கள் கூடத் தெரியாமல், சத்துணவிற்காகவே குழந்தைகள் கோடிக்கணக்கில் அரசுப் பள்ளிகளுக்கு வருவதும் இந்நாட்டில்தான். இன்று அரசுப் பள்ளிகள் முற்றிலும் ஏழைகளுக்கு மட்டுமானவையாக மாறி விட்டன. நகரங்களைப் பொறுத்தவரை, சென்ற தலைமுறைப் பெற்றோர்களில் பெரும்பான்மையோர் அரசுப்பள்ளி-அரசுக் கல்லூரிகளில் படித்து வந்தவர்கள்தான். அப்போது தனியார் பள்ளிகள் ஒப்பீட்டளவில் மிகக் குறைவாகவே இருந்தன.

ஏழையும், பணக்காரனும், குறிப்பிட்ட அளவில் சாதிய வேறுபாடுகள் இல்லாமலும், சமூகத்தின் எல்லாப் பிரிவினரும் அரசுப் பள்ளிகளில் சங்கமித்தனர். கிராமப்புறங்களிலிருந்து வரும் மாணவர்களின் வழியாக கிராம வாழ்க்கையைப் பற்றியும், விவசாயத்தின் நிலை குறித்தும் தெரிந்து வைத்திருந்தனர். தனது வர்க்கம் தவிர, ஏனைய வர்க்கங்கள் எப்படி வாழ்கின்றன என்பதை அறியக்கூடிய வாய்ப்பை அன்றைய அரசுப் பள்ளிகள் வழங்கின. அதனால்தான் இன்றைய மாணவர்களை விட, சென்ற தலைமுறை மாணவர்கள் பொது அறிவிலும், வாழ்க்கை குறித்த யதார்த்தமான கண்ணோட்டத்திலும் மேம்பட்டு விளங்குகின்றனர். திராவிட இயக்கமும், இடதுசாரி இயக்கமும் இந்தப்பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில்தான் தமது அடிப்படையைக் கட்டியமைத்தன.

இன்று வர்க்க முரண்பாடு துல்லியமாகப் பிரிந்து விட்டது. காசு உள்ளவனுக்கு தனியார் பள்ளி மற்றும் சுயநிதிக் கல்லூரி; இல்லாதவனுக்கு அரசுப் பள்ளி. தனியார் மயம் நாட்டை பன்னாட்டு நிறுவனங்களுக்கு வேட்டைக் காடாக மாற்றிவருகிறது என்ற அநீதிக்கு, குறைவில்லாத பங்கை தனியார் பள்ளிகளும் செய்து வருகின்றன. மேற்கண்ட துப்பாக்கிச் சூடுகளில் ஈடுபட்ட மாணவர்கள் பலரும், இத்தகைய தனியார் பள்ளிகளில் படிப்பவர்கள்தான். அரசுப் பள்ளிகள் என்னென்ன நன்மைகளைச் செய்கிறதோ, அவற்றின் நேரெதிர் தீமைகளைத் தனியார் பள்ளிகளும் சுயநிதிக் கல்லூரிகளும் செய்து வருகின்றன. இங்கு மேட்டுக்குடி மற்றும் நடுத்தர வர்க்கங்களைச் சேர்ந்தோரே படிக்க வருகின்

www.padippakam.com

றனர். உழைக்கும் வர்க்கங்களைச் சேர்ந்தவர்களும் கடன் வாங்கியாவது இப்பள்ளிகளுக்கு வந்தாலும், இவர்கள் இங்கே சிறுபான்மையினர்தான். ஆகவே இப்பள்ளிகள் சமூகத்தைப் பிரதிபலிப்பதில்லை. வண்ணமயமான வாழ்க்கையின் வகைகள் இங்கே பரிமாறப்படுவதில்லை. நடுத்தர வர்க்கத்தின் காரியவாத வாழ்க்கை மட்டுமே இங்கு பேசு பொருளாக இருக்கிறது.


சமீபத்தில் சந்தைக்கு வந்த செல்பேசிகள், வாகனங்கள், டி.வி.க்கள், கணினிகள் எவை என்பதுதான் இங்கே மாணவர்களின் பொது அறிவை வளர்க்கும் கல்வி! எதிர்காலத்தில் டாக்டர், இன்ஜினியர், எம்.பி.ஏ, அமெரிக்கா முதலான இலட்சியங்களை அடையவேண்டும் என்பதை இப்பள்ளிகள் ஊட்டி வளர்க்கின்றன. அவ்வகையில் சுயநலமும், பிழைப்புவாதமும் மாணவர்களின் நற்பண்புகளாக ஏற்றப் படுகின்றன.

இதனால் , போட்டி, பொறாமை, இரக்கமின்மை, முதலிய சொத்துக்கள் ஒவ்வொரு மாணவனுக்கும் அவனது இலட்சியத்தை அடைவதற்குத் தேவைப்படுகின்றன. எல்லா மாணவர்களும் இக்காரியவாதப் போட்டியில் வெல்லமுடியாது என்பதால் சோர்வும், விரக்தியும், தனிமைப்படுவதும் நடக்கிறது. சில சமயங்களில் அது சமூகத்தின் மீதான கோபமாகவும் வெடிக்கிறது. தன்னிலும் ஆடம்பர வாழ்வைப் பார்த்து ஏங்குவதும், அதை அடைய குறுக்கு வழிகளை நாடுவதும் இயல்பான விசயங்களாக ஏற்கப்படுகின்றன.

முன்னர் கண்ட செல்பேசி-இணையக் கலாச்சாரம், திருமணத்திற்கு முந்தைய உறவு, புத்தாண்டுக் கொண்டாட்டங்கள், பீர் கலாச்சாரம், வீடியோ விளையாட்டு முதலியவற்றிலும், தனியார் பள்ளி மாணவர்களே முன்னிலை வகிக்கின்றனர். பள்ளி திறக்கும் பருவத்தில் எல்லாத் தனியார் பள்ளிகளும் தங்களது தேர்ச்சி விகிதத்தை விளம்பரமாக வெளியிட்டு பெற்றோர்களை ஈர்க்கின்றன.

அந்த விளம்பரங்களில் கூறப்படாத செய்தி என்னவென்றால், வன்முறை விகிதத்திலும் இப்பள்ளிகள்தான் முதலிடம் வகிக்கின்றன என்பதுதான். சுருங்கக்கூறின் அரசுப் பள்ளிகள் ஒரு மாணவனை நல்ல குடிமகனாக மாற்றும் போது, தனியார் பள்ளிகளோ ஒரு மாணவனை சமூகத்திற்கு விரோதமான தனிநபராய் வளர்க்கின்றன. கல்வியில் தனியார்மயம் நுழைந்ததற்கு, நாம் பெற்றுள்ள சாபக்கேடு இதுதான்.

நடுத்தர வர்க்கத்தின் தனியார் பள்ளி மோகத்திற்கு இணையான மற்றொரு மோகம், ஆங்கில வழிக் கல்வி. ஆங்கில வழிக் கல்விக்கும் மாணவர் வன்முறைக்கும் என்ன சம்பந்தம் என்று சிலர் நினைக்கலாம். முதலில் கண்ட துப்பாக்கி வன்முறை மாணவர்களெல்லாம், ஆங்கில வழிக் கல்வியில் படிப்பவர்கள்தான். இதை வைத்து மட்டுமே, ஆங்கில மோகம் வன்முறையை வளர்க்கிறது என்று சொல்லவில்லை. சிறார்களின் கல்வியறிவுக்காக பயன்படுத்தப்படும் ஆங்கிலம், அவர்களுடைய வாழ்க்கையை ரத்து செய்கிறது. ஐ.டி துறையின் எழுச்சிக்குப் பிறகு வேலைவாய்ப்பிற்காக ஆங்கிலம் மட்டுமே உதவும் என்ற சூழ்நிலையில், தமிழ் வழிக் கல்வியின் மீது பலருக்கு நம்பிக்கையில்லாமல் இருக்கலாம். ஒரு மொழி என்ற அளவில் ஆங்கிலத்தை தேர்ச்சியுடன் கற்றுக் கொள்வதும், அதை ஒரு பயிற்று மொழியாகவே பயன்படுத்துவதும் ஒன்றல்ல.



கான்வெண்டுச் சிறுவர்களை விட
கண்ணியமாக வளரும் குழந்தைத் தொழிலாளர்கள்.

### அன்னியப்படுத்தும் ஆங்கில மோகம்

1947-க்குப் பின்னர் உயர் கல்விக்காகப் படித்த முதல் தலைமுறையைச் சேர்ந்தவர்கள், தமிழ் வழிக் கல்வி கற்றவர்கள் என்பதோடு ஆங்கிலத்திலும் புலமை வாய்ந்தவர்களாக இருப்பதையும் காண்கிறோம். இவர்களது பெற்றோர்கள் எவரும் பள்ளிக்கூடத்தை எட்டிப் பார்த்தவர்கள் அல்லர். இருப்பினும் வறியவாழ்க்கையோடு, பலமைல் தூரம் நடந்துச் சென்று, கல்விக்காகக் கடும் உழைப்பு செலுத்தி, போராடிக் கற்றார்கள். அந்தக் கால ஆசிரியர்களும் அர்ப்பணிப்பு உணர்வுடன் கல்விப் பணி செய்தார்கள்.

அதற்குப் பிந்தைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள், வசதியான வாழ்க்கையுடன் பள்ளிக்குச் சென்றாலும், அவர்களுக்கு ஆங்கிலம் மட்டுமல்ல தமிழும் தெரியாமல் இருப்பதைக் காண்கிறோம். இது போக, இன்றைய மாணவர்களின் கவனத்தைச் சிதறடிக்கும் பொழுது போக்குகளும் ஏராளம். மேலும் அன்று உயர்கல்வி முடித்தால் ஏதோ ஒரு அரசுப் பணி கிடைக்கும் என்ற நிலைமையும் இன்று இல்லை. இந்தப் பிரச்சினையை ஆங்கிலவழிக் கல்வி தீர்த்து விடாது என்பதையே இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

மேலும் ஆங்கிலவழிக் கல்வி ஒரு மாணவனை யதார்த்தமான சமூக வாழ்க்கையிலிருந்து அன்னியப்படுத்


படிப்பகம்

www.padippakam.com

துவதோடு, அவனது அறிவுத்திறன் வளர்ச்சிக்கும் குந்தகம் விளைவிக்கிறது. குழந்தைப் பருவத்திலிருந்து வளரும் சிறார்கள் தாயுடனும், தமிழுடனும் சேர்ந்தே உலகை அறியத் துவங்குகிறார்கள். பெற்றோர், சுற்றம், உற்றம், நட்பு, தெரு, பெட்டிக்கடைக்காரர், மளிகைக் கடைக்காரர், வணிகர்கள், ஆட்டோக்காரர், பேருந்து ஓட்டுநர் என தமிழால் சூழப்பட்ட உலகில்தான், சிறார்களின் வாழ்க்கைக் கல்வி துளிர் விடத் துவங்குகிறது. இந்தச் சூழலை ஆங்கில வழிக் கல்வி செயற்கையாக துண்டிப்பதோடு, அந்த உறவு மேற்கொண்டு வளர விடாமலும் செய்கிறது.

இதனால் ஆங்கில வழிக் கல்வியின் உலகம் பள்ளி வகுப்பறையுடன் சுருங்கி விடுகிறது. அதனால்தான் ஆங்கில வகுப்பில் படிக்கும் மாணவர்கள் பொதுவில் தனிமை விரும்பிகளாகவும், சிறுசிறு பிரச்சினைகளைக்கூட தீர்ப்பதற்கு இலாயக்கில்லாதவர்களாகவும், சமகாலப் பொது அறிவில் பின்தங்கியவர்களாகவும் இருக்கிறார்கள். பொது வாழ்க்கைக்கு ஆங்கிலம் விதித்திருக்கும் இத்தடைகள்தான், அவர்களை பொறுமையிழந்தவர்களாகவும், வன்முறை சுபாவம் கொண்டவர்களாகவும் மெல்ல மெல்ல மாற்றுகிறது. தமிழை விட ஆங்கிலம்தான் நுகர்வுக் கலாச்சாரத்தின் எல்லா வகைகளுக்கும் பொருத்தமாக இருப்பதால், எரியும் கொள்ளியில் எண்ணெயை ஊற்றி தீப்பிடிக்க வைக்கிறது.

தேம்ஸ் நதிக்கரையையும், வாஷிங்டன் அதிபர்களையும், அமெரிக்க மல்யுத்த வீரர்களையும், வால்ட் டிஸ்னியின் முயலையும் அறிந்து வைத்திருக்கும் ஆங்கில மாணவன், தாமிரபரணி நதி பற்றியோ, காவிரியின் கீழத்தஞ்சை விவசாயப் பிரச்சினை பற்றியோ, காஞ்சிபுரத்தின் பட்டுத்தறி பற்றியோ, ஏன் கபடி விளையாட்டைக்கூட தெரியாதவனாக இருக்கிறான். இப்படி தமிழக வாழ்க்கையிலிருந்து தூக்கியெறியப்பட்டு, தனக்குத் தொடர்பற்ற மேற்கத்திய விசயங்களுக்கு அறிமுகமாகும் மாணவன்தான் இந்த மண், மக்கள், வாழ்க்கை குறித்து வெறுப்போடும், நம்பிக்கையில்லாமலும் வாழப் பணிக்கப்படுகிறான்.

**தனது வர்க்கம் தவிர, ஏனைய வர்க்கங்கள் எப்படி வாழ்கின்றன என்பதை அறியக்கூடிய வாய்ப்பை அன்றைய அரசுப் பள்ளிகள் வழங்கின. அதனால்தான் இன்றைய மாணவர்களை விட, சென்ற தலைமுறை மாணவர்கள் பொது அறிவிலும், வாழ்க்கை குறித்த யதார்த்தமான கண்ணோட்டத்திலும் மேம்பட்டு விளங்குகின்றனர்.**

விவசாயப் பின்னணியிலிருந்து வரும் ஒரு மாணவனுக்கு, நூற்றுக்கணக்கான தாவர வகைகளும், கிராம வாழ்க்கை மூலம் விவசாய அனுபவமும் தமிழ் வழியாகத்தான் தெரிந்திருக்கும். இம்மாணவன் ஆங்கிலத்தின் மூலம் தாவரவியலைக் கற்பதால் என்ன நடக்கும்? அவன் சேகரித்து வைத்திருந்த அறிவுக்குப் பயனில்லாமல் போவதோடு, ஆயிரக்கணக்கான ஆண்டு விவசாய அறிவைத் தாங்கி வரும் தமிழக விவசாயிகளுடன் பேசுவதற்குக் கூட வழியில்லாமலும் போகிறது. இந்த அவலம் எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும்.

இதனால்தான் ஆங்கில வழிக் கல்வி அறிவுத் திறனை மட்டுப்படுத்துவதோடு, சமூகத் தொடர்பையும் இல்லாமல் செய்து விடுகிறது என்கிறோம். ஆங்கிலவழிக் கல்வியினால் வேலை கிடைத்துவிடும் என்ற மூடநம்பிக்கையின் விளைவாக, சிறார்களை தனியார் பள்ளிகளில் ஆங்கிலத்தில் படிக்க வைக்கும் பெற்றோர்கள் அனைவரும், உண்மையில் தமது வாரிசுகளை வாழ்க்கையை எதிர்கொள்ளத் திராணியற்றவர்களாக மாற்றுகிறார்கள். இது போக இன்றைய பாடத்திட்டமும் மேலும் மேலும் தொழில்முறைத் தேர்ச்சியை நோக்கி மாற்றப்படுவதால் அதில் பொது அறிவும், சமூகக் கண்ணோட்டமும் அருகி வருகிறது.

இந்த நோய்களோடு வட இந்தியாவில் இருக்கும் மாணவர்களுக்கு சாதி-வர்க்கத் திமிரும் சேர்ந்து கொள்கிறது. தமிழகத்தில் இவை இல்லாமல் இல்லை என்றாலும், இந்தி பேசும் மாநிலங்களில் இவை அதிகம். இட ஒதுக்கீட்டிற்கு எதிராக மேல் சாதி மாணவர்கள் நடத்திய போராட்டத்தை, இங்கு நினைவு படுத்திக் கொள்வோம்.

வட இந்தியாவில் அநேக பிரபலங்கள் துப்பாக்கியோடும் பாதுகாவலர்களோடும்தான் உலா வருகிறார்கள். அப்பனே கிரிமினலாக இருக்கும் போது, மகன் அப்படி இல்லாமல் இருந்தால்தான் ஆச்சரியம். ஜெசிகாலாலைக் கொன்ற மனுசர்மாதான் வடக்கின் மேட்டுக்குடி மாணவர்களுக்கு வகை மாதிரி. ஏழைகள் மற்றும் தலித்துகள் மீது வன்மம் கொண்டவர்களாகத்தான், வட இந்திய மாணவர்கள் வளர்க்கப் படுகிறார்கள். கூடவே இந்து மதவெறிப் பாசிசத்தின் செல்வாக்கும் இவர்களிடத்தில் அதிகம்.


•••

இந்தக் கட்டுரையின் இறுதிப் பகுதிக்கு வந்துவிட்டோம். பொதுவில் இன்றைய மாணவத் தலைமுறையினர் இளமைக்குரிய துடிப்புடனோ, உற்சாகத்துடனோ, கற்றுக் கொள்ளும் ஆர்வத்துடனோ இல்லை. முக்கியமாக, அவர்களது மனவலிமை மேலும் மேலும் குறைந்து வருகிறது. பள்ளி இறுதி ஆண்டு மதிப்பெண்கள் வந்தவுடனேயே, தேர்ச்சி பெறாத மாணவர்களிடத்தில் தற்கொலை செய்து கொள்ளும் போக்கு சமீப காலமாக அதிகரித்து வருவதையும் பார்க்கிறோம். வீட்டு நிலைமைக்குப் பொறுப்பேற்கும் சென்ற தலைமுறையின் பண்பு கூட, இத்தலைமுறை மாணவர்களிடத்தில் இல்லை. காலச் சூழலில் அடித்துச் செல்லப்படும் இன்றைய நிலையில், நாம் என்ன செய்ய முடியும் என்று சிலர் விரக்தி அடையலாம். அப்படி இல்லை.

இக்கட்டுரை மாணவரைச் சீர்குலைக்கும் விசயங்களைப் பரிசீலிப்பதோடு நின்று விடவில்லை. நேர்மறையில் ஒரு மாணவனை எப்படி வளர்க்க வேண்டும் என்ற தீர்வுகளையும் உங்களுக்கு எடுத்துச் சொல்கிறது. அதைப் புரிந்து கொள்வதோடு, நடைமுறைப்படுத்துவதற்கும் முயற்சி செய்யுங்கள். இல்லையேல் அற்பப் பிரச்சினைகளுக்காக ஆத்திரங் கொண்டு வெடிப்பதற்குத் துப்பாக்கிதான் வேண்டுமென்பதில்லை, கிடைக்கும் எதுவும் பயன்படும். அதுவும் கண்காணாத ஒரு வீட்டில்தான் நடக்கவேண்டும் என்பதில்லை, அந்த வீடு உங்களுடையதாகவும் இருக்கலாம்.

● வேல்ராசன்

www.padippakam.com




கட்-அவுட் ஆடம்பர விளம்பரங்களை
கைவிட வேண்டும்!
கையில் தீச்சட்டி ஏந்தி
தீ மிதிக்கும் மூடத்தனம் ஒழிய வேண்டும்!
— இது கருணாநிதியின் ஊருக்கு உபதேசங்கள்.

''பெருசு அப்படித்தான் வயசான காலத்துல
பேசிவிட்டு திரியும்.
நீ பெருசு பெருசா வைடா என் கட் அவுட்டை,
எடுடா கரகத்தை,
குத்துடா அலகு காவடியை,
வெட்டுடா பிறந்தநாள் கேக்கை
— இது மு.க. அழகிரியின் மதுரைக் கொண்டாட்டங்கள்.

மனைவி காந்தி கிரிக்கெட் போட்டியைத் துவக்கி வைக்க,
மகன் துரை தயாநிதி பிளக்ஸ் பேனர்களில்
பாட்டன் சொத்துக்கு உரிமை கோர,
மகள் கயல்விழி அப்பாவுக்கு வந்த வாழ்த்துச் செய்திகளை
மலராகத் தொகுத்து வெளியிட்டு வீரவாளைப் பெற,
அழகிரியின் 57-ஆவது பிறந்தநாள் படையெடுப்பில்
தங்கை கனிமொழியும் தன் பங்குக்கு
அண்ணா வழியில் போய்
அட்டாக் பாண்டியனைக் கண்டெடுத்த
அண்ணனின் போர்க்குணத்தைப் பாராட்ட
குடும்ப அரசியல் சந்தி சிரித்தது.

ஐம்பத்தியேழாவது பிறந்தநாளையொட்டி
ஐந்து கல்யாண மண்டபங்களில் சாப்பாடு
ஐநூற்று எழுபது பேருக்கு வேட்டி, சேலை
ஐம்பத்தியேழு பேருக்கு தையல் மிஷின்
ஐம்பத்தியேழு பேருக்கு அயர்ன் பாக்ஸ்
ஐம்பத்தியேழு ஜோடிகளுக்கு இலவசத் திருமணம்
ஐம்பத்தியேழு கோயில்களில் அன்னதானம்
இதுகளோடு ஒரு மூன்றை மட்டும் சேர்த்தால்
'அம்மா' பிறந்தநாளுக்கும்
அழகிரி ஆர்ப்பாட்டத்திற்கும் வேறுபாடில்லை.

''மதுரையின் ஐந்தாவது அதிசயம் அழகிரி'' என்று
வித்தகக்கவி முதுகைச் சொறிய,
''அழகிரி என் தந்தைக்கு இணையானவர்'' என்று
தங்கம் தென்னரசு மடியில் கையை வைக்க,
''கழகத்தின் ஆபத்தாண்டவரே'' என்று
கம்பம் செல்வேந்திரன் காலைச் சுற்ற,
பழைய பெருச்சாளி ராஜ கண்ணப்பனோ
''தி.மு.க.வின் இதயத்துடிப்பே'' என்று
பதவித் துடிப்பில் பல்லைக் காட்ட,
ஆற்றலரசர் தனது அதிகாரச் செல்வாக்கை
அனுபவித்து மகிழ்ந்தார்.

பிறந்தநாளையொட்டி வேட்டி மட்டுமா,
விளங்காத ஜென்மங்களுக்கு பேட்டியும் கொடுத்தார்:
''நேரு குடும்ப அரசியல் செய்யவில்லையா?
அன்புமணியை ராமதாஸ் அழைத்து வரவில்லையா?
விஜயகாந்த் மச்சானுக்கு பொறுப்பு தரவில்லையா?
அது மாதிரிதான்டா தி.மு.க.வும் எங்கப்பன் சொத்து
இதுக்கும் மேல புரியலைன்னா
என் மவனைக் கேளுடா வெண்ணை!'' என்று
பிய்த்து உதறி விட்டார்.

அ.தி.மு.க.வின் அடாவடிகளை எதிர்கொள்ள
இனி அழகிரி தி.மு.க.வாலேயே முடியும்!
அடிக்குற போஸ்டர் அளவை வைத்தே - நாளை
அண்ணன் நிழலில் பொறுக்கித் திங்க முடியும் என்று
ஐம்பத்தி எட்டாவது பிறந்தநாளுக்கு இதை விட
பெரிதாகக் கலக்குவது பற்றி இப்போதே
சிந்திக்க ஆரம்பித்து விட்டார்கள் உடன்பிறப்புகள்.

தம்பி பரதனுக்காக முடிதுறந்த ராமர் அழகிரி
அம்பினை ஹாத்வே கேபிளுக்குள் நுழைக்க
இந்தியில் புகழ்பாடும் சுவரொட்டிகள்
எந்தப் பதவியிலும் இல்லாத ஏழைப் பங்காளனுக்கு
போலீஸ் துரத்தி, துரத்தி ராயல் சல்யூட்டுகள்.

பிழைப்புவாதிகள், துதிபாடிகள், சாதியக் கழிசடைகள்
அண்ணனின் பார்வையால்
தெருக்கோடியிலிருந்து பல கோடிக்குப் போனவர்கள்
அடித்த கூத்தில் கூச்சமில்லாமல் திளைக்கும்
அழகிரியைப் பார்த்து..
அடக்கி வாசித்த ஜெயலலிதாவே
இனி நமக்கென்ன தயக்கம் என்று
கழட்டிப் போட்ட பட்டுப்புடவையையும்
வைரக் கம்மலையும் மாட்டிக்கொண்டு
களத்தில் குதித்தாயிற்று..

முதலாளித்துவ அரசியல் போக்கை விமர்சித்த
காரல் மார்க்ஸ் இப்படிச் சொன்னார்:
''இனி பொய்ச்சத்தியம்தான் மதத்தைக் காப்பாற்றும்
ஒழுக்கக்கேடுதான் குடும்பத்தைக் காப்பாற்றும்
திருட்டுதான் சொத்தைக் காப்பாற்றும்''.
கழகக் கண்மணிகள் சொல்கிறார்கள்:
''இனி அழகிரிதான் கட்சியைக் காப்பாற்றுவார்.''

• சுடர்விழி


படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

நிறுவனம், தமிழகத்தில் மட்டுமே 270 திரையரங்குகளை வாங்கியிருக்கிறது. அவற்றில் வாரம் ஒரு புதுப்படம் வெளியிடுவது அவர்களது திட்டம்.

இது போக தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதில் புகழ்பெற்ற யு.டி.வி மோஷன் பிக்சர்ஸ், அம்பானியின் 'அட்லேப்ஸ்', ஐங்கரன் இன்டர்நேஷனல், அஷ்ட விநாயகா முதலான நிறுவனங்களும், கோடம்பாக்கத்தைக் கைப்பற்றக் களமிறங்கியிருக்கின்றன. இங்கு மட்டும் இவை போட்டிருக்கும் முதலீடு 1000 கோடிகளைத் தாண்டும் என்கிறார்கள்.

இந்தப் புள்ளிவிவரங்களைப் பட்டியலிடும் இந்தியா டுடே இதழ், இனி கோடம்பாக்கத்தில் தமிழ்த் திரைப்படங்கள் பன்னாட்டுத் தரத்தில், தொழில் முறையில் தயாரிக்கப்படும் என்பதாக மகிழ்கிறது. கல்வியோ, காப்பீடோ, மருத்துவமோ தனியார்மயமானால், அதை முதலில் கொண்டாடுவது இந்தியா டுடேதான். மதவெறி போல இது ஒரு முதலாளித்துவ வெறி!




இது ஒருபுறமிருக்க இயக்குநர்களும், நடிகர்களும் கூட இந்நிறுவனங்களின் வருகையை வரவேற்கிறார்கள். எல்லாம் திட்டமிட்டபடி நடக்கும், பணத்துக்காக தயாரிப்பாளர் பின்னால் அலையவேண்டியதில்லை, என்று அவர்களது மகிழ்ச்சி வழிகிறது. உள்ளூர் தயாரிப்பு நிறுவனங்கள் இப்பெரிய நிறுவனங்களுடன் கூட்டு வைத்துக் கொண்டுள்ளன. அப்படி வைத்துக் கொள்ள முடியாத பழைய பெருச்சாளிகள், 'தங்களது அனுபவங்கள் இந்த நிறுவனங்களுக்கு இல்லை என்பதால் தாக்குப் பிடிக்க முடியாது' என்கிறார்கள். இத்தகைய நல்லது கெட்டது விவாதங்களுக்கு அப்பால்தான், உண்மை ஒளிந்திருக்கிறது.

முதலாவதாக, சினிமாவை முற்றிலுமாக கட்டுப்படுத்தப் போகும் ஏகபோகமாக இந்நிறுவனங்கள் மாறப் போகின்றன. அதாவது வெறும் திரைப்படத் தயாரிப்பு என்பதோடு அவை நிற்கப் போவதில்லை. நடிகர்கள், இயக்குநர்கள், தயாரிப்பு, வினியோகம், திரையிடல் அத்தனையும் இவர்களது கட்டுப்பாட்டில்தான் வரும். திரையரங்குகளைக் கூட இவர்கள் விட்டு வைக்கப்போவதில்லை. சாய்மீரா நிறுவனம் மட்டுமே 270 தியேட்டர்களை வாங்கிக் குவித்துள்ளதென்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

நகரங்களில் உள்ள திரையரங்குகளை எல்லாம் மல்டி பிளக்ஸ் வகையறாக்களாக மாற்றப் போகிறார்கள். இதன்படி சினிமா, உணவகம், கடைகள், கேளிக்கை மையங்கள் அனைத்தும், ஒரே கூரையின் கீழ் இருக்கும். ஆக பொழுது போக்கென்றாலே இம்மையங்களுக்கு செல்லதான் வேண்டும் என்று மாற்றுவார்கள். இப்படி சினிமாவின் ஒட்டுமொத்தமான வலைப் பின்னலை கைப்பற்றுவதுதான் இவர்களின் நோக்கம். இதனால் எந்த ஒரு தனிநபரும், திரைப்படம் தயாரித்து வெளியிட முடியாது என்ற நிலை உருவாகும்.

இரண்டாவதாக, திரையுலகின் படைப்பாளிகள் இவர்களது கட்டுப்பாட்டின்கீழ் வருவதால் நிறுவனங்களின் அரசியல் பொருளாதார பண்பாட்டுக் கொள்கையையே வழிநடத்தும் கோட்பாடாக அனைவரும் ஏற்க வேண்டும். அதாவது பெயரளவிலான முற்போக்கு, தமிழார்வம், இடதுசாரி ஆதரவு போன்ற கொள்கைகளை, இனி எந்தப் படைப்பாளியும் திரைக்கு உள்ளே மட்டுமல்ல, திரைக்கு வெளியேயும் பேசமுடியாது. ஏற்கனவே அப்படி ஒன்றும் பெரிதாக இருந்து விடவில்லை என்றாலும், அப்படி ஒன்று இனி தோன்றவே முடியாது என்பதுதான் குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது, சினிமாவின் உள்ளடக்கமும், வடிவமும் அமெரிக்க வார்ப்பில் மாற்றப்படும். இசுலாமிய வெறுப்பு, கம்யூனிச விரோதம், தனிநபர் வாதம், நுகர்வு வெறி, பாலியல் வெறி, ஆடம்பர வாழ்வு, ஆங்கில மோகம், அமெரிக்கப் பாசம், போன்றவை படைப்பினுடைய அடிநாதமாக மாற்றப்படும். நிலவுடைமைத் தமிழ் அற்ப உணர்ச்சியோடு, நவீன முதலாளித்துவ அற்ப உணர்ச்சிகள் சேர்ந்து கொள்ளும். இந்த மண்ணையும், மக்களையும், வாழ்க்கையையும் மறந்து, 'நடுத்தர மேட்டுக்குடி, வாழ்வே வாழ்க்கையின் இலட்சியம்' என்று போற்றப்படும். இந்தப் போதையோடு ஒப்பிட்டால், டாஸ்மார்க்கில் சரக்கடிப்பது பெரிய பிரச்சினையல்ல.

தமிழ் மக்களின் இதயத்துடிப்பாக மாறிவிட்ட சினிமாவை தரகு முதலாளிகள் கைப்பற்றுகிறார்கள் என்றால், அது இதயத்தோடு முடிந்து விடப்போவதில்லை; மூளையைக் கரைத்து நம்மை முண்டமாக்கப் போகும் விசயம் அது.

● சாத்தன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புக்கள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87
Regd. No: TN / CCN / 84 / '06-'08



# திருக்கடையூர் புராணம் அல்லது 60-வது கண்டம்

சித்தயோகம் அமிர்தயோகம் கூடிவர
ஜெட் விமானம் காத்திருக்க
வந்தேறியது மனிதக்கோளாறு.
பார்ப்பனக் கொழுப்பைச் சீரணிக்க முடியாமல் -
பாவம்
விமானத்திற்கு இயந்திரக் கோளாறு!

நல்லவேளை..
நடுவானில் எமனோடு போயிருக்க
வேண்டியவர்களை
மீட்டுக் காத்தருளி
விமானிக்கு ஆயுள் விருத்தியளித்தது
ஆயில் என்ஜின்.
ஓ. பன்னீர்செல்வம் போல் உணர்ச்சியற்று
எந்திரமாய் இயங்கியதால்
அம்பாளின் சாபத்தீக்கு ஆளாகி
எரியாமல் தப்பித்தது ஏர் சர்வீஸ் விமானம்.

தமிழகத்தின் 'சகுனத்தடை' தரையிறக்கப்பட்டது
பத்திரமாய்.
வளிமண்டலத்திலேறிய தூசு துடைக்கப்பட்டதால் -
வழிமாறி சாலை வழியே ஓடியது சாக்கடை.

ஒரே பரபரப்பு!
இரண்டு லோடு விசேடப் பொருட்கள்
ஒரு லோடு போயஸ் குண்டுடன்....
திண்டிவனம் வழியே தீவிரவாதிகள் ஊடுருவல்!
தமிழகத்தைக் கலக்கும் பார்ப்பனத் தீவிரவாதி
திருக்கடையூர் வருகை!

"பாதம் பணிந்தேன்... போதை தெளிந்தேன்...
பாவி, உனக்காகவே பட்டை அடித்தேன்...
கோயில் உனது! குடி உனது!- என் ஆவியும் உனது!
ஆட்கொள்ள மாட்டாயோ! "- தருமை ஆதீனம்
உடுக்கெடுக்க...பயந்து போன பிச்சைக்காரர்கள்
ஊரை விட்டே ஓட்டம்!

பலத்த பாதுகாப்பு...
துப்பாக்கிகளுடன் ஆயுதக் குழுக்கள் -
தர்ப்பைப் புல்லுடன் ஆரியக் குருக்கள்!
சேரப்போகும் மனித உணர்ச்சியற்ற தோள்கள் கண்டு
நடுங்கின பூக்கள்!
வேதபாஷையின் விளங்காத கலவரத்தால்
ஓடி ஒடுங்கின வௌவால்கள்!
யாகக் குண்டம் புகை கிளப்ப...
புறப்பட்டது பூதம்.

கோ பூஜைக்கு வந்த பசு குலை நடுங்கியது.
கறந்து விடுமோ கொள்ளைக்கரம் என்றஞ்சி
காம்புகள் ஒளித்து, மடிதனை மறைத்தது.

பார்ப்பன வெறி முகம்
பார்த்துத் தொலைத்தால்
மதம் பிடித்துவிடுமோ என்றஞ்சி
கலங்கி நின்றது கஜ பூஜைக்கு வந்த யானை!

பச்சைப் பட்டும் ஒட்டியாணமும் பூட்டி
இச்சை கொண்ட தேவியை
இழுத்துச் சென்று
இன்னுமொரு தோழியாக
மாலை மாற்றிவிட்டால்...
என் செய்வேன் எனப் படாத பாடுபட்டு
அபிராமியை மீட்டார்
அமிர்தகடேஸ்வரர்.

அடித்த கொள்ளைக்கும்...
குடித்த இரத்தத்திற்கும்...
அறுபது வயசு பத்தாதாம்,
"ஆயுளைத்தா" என
ஆரிய பூதம் வருகிறது.

செத்துப் பிழைக்கும் தமிழகமே,
அடுத்த குறி உனக்குத்தான்!

● துரை. சண்முகம்

படிப்பகம்